கல்வி

வே. சாரநாதன். M.A.

ஸ்டார் பிரசுரம்
காரைக்குடி

No. 7

கல்வி

முதலிய கட்டுரைகள்

ஆசிரியர்

வே. சாரநாதன், எம். ஏ.

PRINCIPAL, NATIONAL COLLEGE

TRICHINOPOLY

★

ஸ்டார் பிரசுரம்

பாலக்கரை, திருச்சி.

முதல் பதிப்பு — *July 1944*

" உளது மினோ வெற்றி
ஒலிமினோ வாழ்த்தொலிகள்!
ஓதுமினோ வேதங்கள்
ஓங்குமினோ! ஓங்குமினோ!"

—பாரதியார்,

PRICE, Rs. 1-6-0

STAR PUBLICATIONS
PALAKARAI, TRICHINOPOLY.

முன்னுரை

இந்த அரிய நூலை அருமையாக எழுதித்தந்து உதவியிருக்கும் ஆசிரியர் திரு. வே. சாரநாதன் அவர்கள், எம்.ஏ., கல்வித்துறையில் அகண்ட அனுபவம் பெற்றவர்கள். பழைய கல்வித் திட்டத்தை புதுமுறையில் நமது நாட்டு வளர்ச்சிக்கு ஏற்றவாறு எப்படித் திருத்தி அமைக்கலாம் என்ற வழியை மிக ஆழமாகப் பரிசிலனை செய்து, அவர் கண்ட உண்மைகளை இங்கே தந்திருக்கிறார்.

அமெரிக்க கவிஞனும் ஞானியுமான எமர்ஸன்போல ஆழ்ந்த கருத்துக்களைத் துருவி ஆராய்ந்து, அவைகளை மிக நுட்பமான நவீன தமிழ் வசன நடையில் நமது ஆசிரியர் எழுதிக் காட்டியிருக்கிறார். ஆங்கிலம், தமிழ், சம்ஸ்கிருதம் – மும் மொழிப் பயிற்சியால், அவர் எழுதும் நடை, கருத்தின் ஹிருதயத்தையே கவ்விப்பிடிக்கிறது. ஒவ்வொரு கட்டுரையிலும், சிந்தனையின் வேரும், கிளைகளும், இலைகளும், மலர்களும், கனிகளும் பலவர்ணங்களுடன் மின்னுகின்றன. ஆங்கில வசனத்தின் ஆழமும் அமைதியும், சில இடங்களில் சுழற்சியும், நமது ஆசிரியரின் நடையில் பிரதிபலிக்கின்றன.

நமது ஆசிரியர் ஆங்கிலத்திலும் மிக நயமான கவிதைகள் எழுதியிருக்கிறார். 'லாசலஸ் ஆபெர்கிராம்பி' போல, ஆழ்ந்த கவிதையுள்ளத்துடன், வசன லாகவத்தை ஆராய்ச்சி நடையில், இதய சிருஷ்யாகவே சித்திரித்திருக்கிறார். 'இமானுவல் ஸ்வீடன்பர்க்' சொல்லுவது போல, எது உண்மை, எங்கே உண்மை மங்கி மாறிக் கிடக்கிறது, அதை ஆழமாகத் துருவி ஆராய்ந்து, உண்மையின் ரூபத்தை உறுதியாக மொழியில் பிரதிபலிக்கச் செய்வதே, எழுத்தாளரின் பொறுப்பு.

இக்கட்டுரைக் கோவையை நாம் படித்து இன்புறும் போது, குறளாசிரியரின் வரிகளே ஞாபகத்திற்கு வருகின்றன:

> " தாமின் புறுவது
> உலகின் புறக்கண்டு
> காமுறுவர் கற்றறிந்தார்."

1—7—44 வி. ஆர். எம். செட்டியார்

பொருளடக்கம்

பசி

பசி என்னும் ஏகாதிபத்திய அரசன் உலகமெங்கும் ஆளுகின்ருன். அவனுக்கு மனிதரின் உடல்களும் உள்ளங்களும் ஒருங்கே அடிமைப்பட்டவை. "அன்னமய: பிராணமய:" உணவு நசித்து விட்டால் உடல் நசித்துவிடுகிறது. உணவின்பொருட்டே நம்முடலும் நம்முடைய மற்ற கருவிகளும் உழைக்கின்றன.

உணவுப்பற்று எல்லாவித பற்றுகளுக்கும் முந்தியது. உண்ணு விரதம் பூண்ட மகாத்மா காந்தியும் தன்னை மாய்த்துக் கொள்வதில்லை என்ற ஒரு உத்தேசத்தால் சர்க்கரைத் தண்ணீரை உட்கொண்டார். உணவு என்பதைச் சாதாரணமாக ஆசைப் பொருளாகக் கருதாமல் ஓர் மருந்துபோல உட்கொள்ள வேண்டும் என்று அவர் போதித்திருக்கிருர். இருந்தாலும் கோடிக்கணக்கான இந்திய மக்கள் போதிய உணவின்றி, வருந்தி, மடிவதைப்பார்க்கச் சகியாது வீராவேசம் பெற்றவர் அவர். அதற்காகவே இந்திய சுதந்திரப் போரை விடாமல் தொடர்ந்திருக்கிருர். உண்மையைக் காக்கவும், மனிதர் உணவைப் போற்றவும், பரிபாலிக்கவும் அவர் முன்வந்துள்ளார். பசியரசனின் பிரஜைகள் இந்தியர்கள். அப்பசியே உருவெடுத்து வந்த கடவுள் ஒவ்வொரு எளிய இந்திய

வின் உறுப்பில் தங்கியிருப்பதாக அவர் கூறுகிறுர். "தரித்திர நாராயணனைப் பார்" என்கிறுர்.

ஆதிகாலத்திலேயே வாழ்க்கையை துக்காலயமென்று வருணித்திருக்கிறுர்கள், இந்தியாவின் ஞானிகள். பசி, மூப்பு – இவ்விரண்டிலும் பெரிய எதிரிகள் மானிடர்க்கில்லை என்று கூறியிருக்கிறுர்கள். இந்தியர்கள் சுகத்தை மிகவும் விரும்பித் தேடியவர்கள் என்பதற்கு நமது சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் கணக்கில்லாத சான்றுகள் இருக்கின்றன. உலகத்திலிருந்து பசியை ஓட்டவேண்டும் என்ற இலட்சியம் இந்தியருக்குத் தொன்று தொட்டு புலப்பட்டுவந்தது. ஆனல் நல்லறிவு எல்லா ஜனங்களுக்கும் பொதுவுடமையாக வேண்டும். ஆகையால் உடலுக்கும் உணர்விற்கும் ஒருங்கே தீங்கிழைக்கும் பசி என்ற கொடும் நிலை, பொறுமை என்ற நற்குணத்திற்கு அடங்கும் பொருட்டு அவர்கள் மனதைப் பக்குவப் படுத்தினுர்கள். பொதுவாக உலக மதங்கள் எல்லாம் போதிப்பது: பசியிலகப்பட்டவனுக்கு பொறுமையே அணிகலனுகும். பசிக்குட்படாமல் பொருளுதவி பெற்றவன் ஈகை என்பதை வாழ்க்கைத் தருமமாகப் பேணவேண்டும் என்பதே.

"விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

"உண்ணப்படும் பொருள் அமிர்தமே யெனினும் தன்னை நோக்கி வந்த விருந்து தன்னில்லின் புறத்ததாக தானே உண்டல் விரும்புதன் முறைமையுடைத்

தன்று.'' இந்தக் கொள்கைக்கு ஒரு ஆக்ஷேபம் உண்டு என்று மகாத்மா காந்தி கூறுகிறார். வருகிற விருந்தாளியும் உழைத்தேயாகவேண்டும். உழைப்பின்றி உண வருந்துதல் திருடனின் வழி என்கிறார். பசிநோயை நீக்க வேண்டும்; அத்துடனேயே உழைப்பு என்ற ஆரோக்கிய நிலையை ஆக்கவேண்டும் என்கிறார் அப் புண்ணிய **புருடன்.**

மேலும், கெட்ட உணவை உட்கொள்வது மிகவும் இழிவான வாழ்க்கை என்று நமது தரும சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது.

> ''யாதயாமம் கதரஸம் பூதிபர்யுஷிதம் சயத்
> உச்சிஷ்டமபி சாமேத்தியம் போஜனம்
> தாமஸப்பிரியம்.'' (பகவத்கீதை)

பழையது; சுவையற்றது; அழுகியது; கெட்டுப் போனது; எச்சில்; அசுத்தம் — இத்தகைய உணவு தமோகுண முடையோருக்குப் பிரியமானது.'' ஆனால் இந்தியாவின் கோடிக்கணக்கான எளிய மக்கள் தாங்களே விரும்பி இவ்வாறான உணவை அருந்துகிறார்களா? அவர்களின் தமோகுணத்தின் ஆதிக்கத்தாலோ அவர்கள் அப்படிச் செய்வது? அந்த இழிவான உணவிற்கு என்ன போட்டி, என்ன யுத்தம் நடுத்தெருக்களில் தினந்தோறும் நடைபெறுகிறது!

பசியரசனின் ஏகாதிபத்திய நாடுகளில் முதன்மையானது இந்தியா. இந்தியாவிலேயே மனிதரின் விவேகத்திற்கும் விடுதலைக்கும் ஆராய்ச்சிகள் பல்லாயிரம்

வருடங்களாகத் தத்துவ ஞானிகளால் நடத்தப்பட்டு வருகின்றன.

"எல்லா உலகினரும் சுகிகளாக விருப்பாராக" என்று நம் நாட்டு மங்கள வாக்கியங்கள் கூவுகின்றன. இந்த அன்யோன்ய விருத்தத்தைப் பாருங்கள். விநோதமாயிருக்கிறது. நெஞ்சு பிளக்கும் சோகத்தையும் இக்காட்சி நமக்குத் தருகிறது. எப்படியும், நாகரிக உணர்ச்சி மட்டும் இந்தியாவின் பொது மக்களுக்கு உண்டாகியது போல் மற்ற சாதியார் ஒருவருக்கும் உண்டாகவில்லை.

"பெயக்கண்டு நஞ்சுண்ட மைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டுபவர்"

"நச்சைவாயிலே கொணர்ந்து
நண்பர் ஊட்டுபோதிலும்
அச்சமில்லை, அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே"

என்ற வானளாவும் தயாகுணம் இந்தியாவிலேயே உதித்ததல்லவா? இந்த சர்ச்சையிலிருந்து பசிநோய் நாகரிக நற்குணங்களின் விளைவுக்கு இன்றியமையாத உரம் என்று கொள்ளலாகாது.

பசி தீயது. பசி பேடித்தனத்திற்கு அடிப்படையானது. பசி கற்பழிக்கும். ஆனப் பசியைக் கொல்ல வேண்டும். "தனி யொருவனுக்கு உணவு இல்லையெனில் சகத்தினை யழித்திடுவோம்."

ஆனால் வீரப்பசி, இன்பக்கலை நிறம்பிய பசி, "பித்தம் தெளிய மருந்தொன்றிருக்கிறது" என்று கூறப்

படும் பசி, உண்மைக் காதற்பசி, அறிவை எட்டிப் பிடிக்கும் பௌருஷமுள்ள பசி, "நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்" உள்ள வித்தகரின் புகழ்ப்பசி, நம்மாழ்வாரின் தெய்வக்காதலாகிய பசி, கொடியரைக் கொன்று தின்னும் கருடனின் பசி, தன் உறவினராகிய கோடிக்கணக்கான மக்களின் பேடித்தனத்தைக் கொல்லும் பசி — மகாத்மா காந்தியின் பசி — இவையெல்லாம் நல்ல பசியே; மேகத்தின் ஈகை என்ற பசி, (உத்தமரின் பரோபகாரம் என்ற பசி.)

> நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
> தான்நல்கா தாகிவிடின்" (குறள்)

(அளவில்லாத கடலும் தன்னியல்பு குறையும், மேகந்தான் அதனைக் குறைத்து அதன் கட்பெய்யாது விடுமாயின்.) இதுவே உண்மையான இன்பப் பசி.

வயிற்றுப் பசியை வெல்லலாம், இல்லை, பூர்த்தி செய்யலாம். ஆத்மாவின் பசி தீராப் பசி, அகாதமான பசி, மனிதனை தேவராக்கும் பசி, (ஆனால் தேவர்கள் பசிதீர்ந்த சுகவாசிகள்.) ஞானப் பசி மனிதனுக்கு இன்றியமையாதது. கல்வி, கேள்விப் பசி, கலைப் பசி, 'கச்சணிந்த.......மாதரிடம்' வைக்கும் ஆசையை வென்றது. தன்னை யழித்துப் புதிதாய் நிர்மாணித்துக் கொள்ளும் பசி. கல்வி என்பது, இப்பசியை மானிடருக்கு உண்டாக்குகிறது.

இவற்றிற்கு நேரெதிராக நோயாளியின் பொய்ப் பசி, கடிகாரத்தைப் பார்த்து சாப்பிடுகிறவனுடைய

ஆகு பசி, குழந்தையின் "போது போகவில்லை, அம்மா, பசிக்கிறது" என்ற அவசரப் பசி (இதில் வயது முதிர்ந்தவர்களும் சேருவார்கள். வெள்ளைக்காரரைப் போல் ஐந்து மணிக்கு டீ என்ற ஒழுக்கம் இருக்கிறதே. ஏன், தின்பதே ஒருபொழுதுபோக்குத்தான்) இன்னும் மனோராச்சியம் பண்ணும் மனிதனின் வாஞ்சைப் பசி, திருட்டு சொத்தில் இன்பமுண்டு என்கிற உணர்ச்சியிலெழும் பசி, பிள்ளையில்லாதவர் சொத்திற்கு ஆசைப்படுகிறவர்களின் வெட்டுப் பசி, சிற்றம்மை தம்பிக்கு சோறு போட்டு விட்டாளே என்ற மாய்ச்சல் பசி, இவ்விதமாக பசி வகைகள் அடுக்கி விடலாம். பிரபஞ்ச வாழ்க்கையின் அம்சங்கள் இவையெல்லாம். மனிதரின் ஆசைகளும் அப்படியே. தங்க மானுக்குச் சீதை ஆசைப்பட்டாள். அது மாயாவி மாரீசனின் உருவம் என்று அவள் கண்டாளா? தன் உயிரைச் சிதைக்கும் ஆசை அது என்று லோகநாயகி சீதைகூட அறியவில்லையே? அவள் அறியாமையைக் கண்டு நமக்குச் சீதையிடத்தில் பிரியமுண்டாகிறது. அப்படியே திரௌபதியின் மூர்க்கத்தனத்திலும் ஈடு படுகிறோம். ஆனால் பீமசேனனுக்குப் பசியதிகம் என்று குந்திதேவி அவனுக்கு இரண்டு பங்கு உணவு பகுத்துவைப்பது இன்னும் ரமணீயமாயிருக்கிறது. பகாசுரனை நாம் வெறுக்கிறோமா? குண்டோதரன் மீனாக்ஷிசுந்தரேஸ்வரருக்கு அத்யந்த சிநேகிதனல்லவா? ஆகையால் பெரும்பசி (அது யானைத் தீ என்ற தீராப்பசியாக மாறக்கூடாது) ரமணீயமானதல்லவா? பசியரசே, பெரும் பசிக்காரரைப் பிடியும், எங்களை விட்டுவிடும்.

இதென்ன விளையாட்டுப்பேச்சு. பசியசுரன் இந்தியாவின் சத்துருக்களுக்கு நற்றுேழனுய்ப் புறப் பட்டுவிட்டானே. மலையாளம், வங்காளம், கலிங்கம் இன்னும் மற்ற இந்திய மாகாணங்கள் பஞ்சத்தின் வாயிலகப்பட்டு அவற்றின் மக்கள் சுட்ட சருகுகள் போல் செத்துப் பரவியிருப்பது நம் கண்ணைப்பொசுக் குகிறதே. ஏழைகள் கூவிக் கூவி சுகவாசிகளான நம்மை அல்பத்தனம் குடிகொண்டவர்களாகக் காட்டி விடுகிருர்களே. ஏழைகள் சமூகம், உலக ஏழை களின் சமுதாயம், பசியரசின் பிரஜைகளின் சமுத்தி ரம்போல் பரவிய சேனை, ஆயுதமின்றியே தம் பகை வர்களை ஒடுக்கக்கூடும். ஆனுல் பட்டினியால் வதைப் பட்டு மாயும் எளியவர் சேனை எதற்காகும்? கிருஷ்ண பகவான் "ஒன்றுமில்லாத ஏழைகள் எப்போதும் எனக்குப் பிரியர்கள்; நானும் ஒன்றுமில்லாத ஏழை" என்ருரே. ஆனுல் அமானிடத் தோற்றமுள்ள இந்த ஏழைகள், பட்டினிப் பூனை வாயில் கடித்துத்தின்னும் எலிகள், பஞ்ச ஓநாய் கிறிப்புசிக்கும் வலியற்ற ஆடுகள், ஏகாதிபத்திய ஆட்சியின் சிப்பந்திப் புலிகள் ஓட்டியோட்டிக் கொலைகொள்ளும் மான்கள், கோர யுத்தகளத்தில் குவிந்திருக்கும் பிணக்கட்டைகள் போல் கிடக்கின்றவர்கள் — இவர்களுக்குக் கிருஷ்ண பகவானின் வாக்கியம் ஏற்கவே ஏற்காது. பசி என் பது "வாடினேன் வாடி வருந்தினேன் வருந்தி" என்ற விவேக நிலையை ஒரு சமயம் மனிதருக்கு உண்டுபண்ணலாம். ஆனுல் அது மிதமான பசி; எப் படியும் பசித்த வேளைக்கு உணவு அளிக்கும் கடவுள் கண்காணிக்கும் ஓர் அருள்பெற்ற நிலை. குசேலரின்

நிலை; வைராக்கிய சாதனம் பெற்றவர்களின் நிலை. ஆனால் அமிதமான, அகாதமான, கூரிய வயிற்றுப்பசி நரகம்போன்றது; நானாவித ஈனத் தன்மையைப் பயிரிடுவதாகும். மனிதனை உருத்தெரியா நாசத்தில் பிணைப்பதாகும். இப்பகைப் பசியை ஒழிக்கும் பொருட்டு உலக விஞ்ஞானிகளிடத்தில் மட்டிலும் அரசாட்சியைக் கடவுள் ஒப்புவிப்பார் என்று நம்புவதற்கில்லையே.

லௌகிக தர்மம்

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒன்றோடொன்று பிணைந்து அமைந்திருக்கும் இருவிதமான வாழ்க்கை முறைகள் இருக்கின்றன. அதிலொன்று நமது நூல்களில் சரீரயாத்திரை என்று சொல்லப்படும் ஊழ்வினைப் பயனுக்குச் சாதனமாம். இதற்கு லௌகிக தர்மம் என்று பெயரிடலாம். உடம்பிற்கும் அது வேண்டும் சுகங்களுக்கும் பேருதவியாயிருக்கிற செயல்களெல்லாவற்றையும் இவ்விதம்குறிப்பிடலாம். நம்முடைய உள்ளத்திற் குடிகொண்டிருக்கும் ஆசையும் அஞ்சிப்பிழைக்கும் புத்தியுமே நம்மை மயக்கி உலகப்பற்றென்பதை நமக்கு உண்டாக்கச் சிறிது காலம் நமக்குப் போகத்தை இந்த லௌகிகதர்மம் அளிக்கும். மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆசையையும் அகங்காரத்தையும் உத்தமர்கள் கூட ஒழிக்க முடியாமல் ஒருவாறு அவற்றைச் சாதகப் படுத்த முயலுகிறார்களே தவிர வேறில்லை; அவற்றைத் தங்கள் ஞானவாழ்வுக்கு அடிப்படையாகவும் செய்து கொள்ளப் பார்க்கிறார்கள்.

ஒருவன் தன் வாழ்க்கையின் அம்சங்களெல்லாம் ஒற்றுமைப்பட்டு இசைந்து ஞானவழியில் ஒருங்கு சேர்ந்து செல்வதை லக்ஷியமாக வைத்துக்கொண்டு தன் வாழ் நாளைச் செம்மையாய்க் கழிக்கவேண்டும். தான் செய்யும் முயற்சியிலெல்லாம் ஓர் அம்சமாவது

மெய்யுணர்தலுக்கு இசைந்ததாவென்பதைக் கவனிக்கவேண்டும். பாடுபட்டுப் பொருள் தேடுவதினுலும், இன்பம் தேடி உழல்வதினுலும், கீர்த்தி பெரிது என்று வீரச்செயல்கள் செய்வதினுலும் நாம் ஒருவேளை கொஞ்சம் கொஞ்சம் ஞானத்தை எட்டிப் பிடிக்கலாம், லௌகிகதர்மமும் ஞானவாழ்வும் நமது குணங்களிலேயே அமுங்கிக்கிடக்கின்றன; அவை ஒன்று சேர்ந்து வெளிப்படும்போது நாம் புகழ் அடைகிறோம். லௌகிகதர்மத்தாலேயே ஞான வுறுப்புக்களை அடைந்து விளங்கலாம். பொருளியலை நாம் நன்கு மதிக்கவேண்டும். மனிதன் பூதேவியின் மகன். உலகப் பொருளனைத்தும் அவனுக்கு நலம் பயக்கும்' அவனளவில் அவை விலையுயர்ந்த பண்டங்கள்; அவை அவனுடைய வாழ்வைப் பெருக்கு கின்றன. பணம், செல்வாக்கு, பலம், இன்னும் மற்ற சக்திகளுள் சிறியது பெரியது யாவும் மனிதனுக்கு அந்தரங்க சுகத்தைக் கொடுக்கவில்லையா? இந்த உலகப்பற்று என்ற சக்தி தொன்றுதொட்டு வரும் பெரும் சக்தியே. அப்படியே துறவு அல்லது அவா வறுத்தலும் பெரிய சக்தியாயிருக்கிறது. இரண்டும் நம்முள்ளத்தில் களித்து ஒன்றோடொன்று போராடிப் பெருகிவருகின்றன. நம் புலன்களினுல் அறியப்படும் விஷயங்களையும் நம்முடம்பின் நலத்தையே கருதி வாழும் மனப்போக்கையும் உலகப் பற்று என்ற இச்சக்தி பாராட்டி வளர்த்துவருகிறது. தியாக புத்தியோவெனில் இதற்கு எப்போதும் எதிர்ப்படையாயிருந்துவருகிறது. இவ்விரண்டின் மகிமையினுல் இன்பமும் துன்பமும் பாவமும்புண்ணி

யமும் விளைகின்றன. ஆத்மசக்தியுள்ள பௌருஷத்தைக் கையாளுவது எதனால் என்றால் உலகப்பற்றையும் தியாக புத்தியையும் தன்வசமாக்கி அவ்வாயிலால் பெருமை நிரம்பிய புத்திநிலையை அடைவதாலேயாம். "புத்தி நிலையில் சரணம் புகு" என்று கீதையிலிருக்கிறது. அதை இவ்விடம் சாமான்ய அர்த்தத்தில் உபயோகிக்கலாம். இவ்விதம் போகத்திற்கும் தியாகத்திற்கும் நடுவில் யோகநிலை ஒன்று இருக்கிறது. அந்நிலையிலிருந்து நாம் சில கலியாண குணங்களைப் பேரவாவுடன் பற்றிக் கையாளலாம். அதற்கு நாம் எப்பொழுதும் வழி தேடியவண்ணமாகவே இருக்க வேண்டும்.

நம் வாழ்க்கையை நடத்துவது ஒரு கலையில் தேர்ச்சியடைவது போன்றது. நாம் படிப்பில் விருத்தியடைவதும், குணாதிசயங்களைப் பெறுவதும், ஞான மார்க்கம் புகுவதும் கீதம் சிற்பம் முதலியவைகளிற் பயில்வது போன்றன. இவற்றில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வகை நுட்பமான அறிவாற்றலும் அப்பியாசமும் வேண்டும். நம்முடைய ஆத்மா தனக்காக மேன்மையும் அழகும் வாய்ந்த ஸ்தூல சரீரமாகிய கோயிலைக் கட்டி அதில் வாழவந்திருக்கும்போதே ஞானத்தை **மறவாமலிருக்கக்கூடும்.** மெய்யன்பு, அமைதி, வாய்மை, நிதானம், ஒழுங்கு என்ற குணங்களை லக்ஷியமாய் வைத்துக்கொண்டு மனிதன் லௌகிக காரியங்களைப் பழுதில்லாமல் செய்துமுடிக்கலாம். ரோமாபுரி சக்ரவர்த்தியான **மார்க்ஸ் ஆரீலியஸ்** இவ்வண்ணம் அகத்திலும் புறத்திலும் சிறப்புள்ள

உபசாந்தத்தைப் பெற்றவரென்று நாம் அறிவோம் "நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" எல்லோரும் புத்தியோகம் என்றதை வழிபடுகிறார்கள். இவ்வித ஆத்மப் பயிற்சியானது மனிதஜாதியார்களின் வேதங்களில் விளங்கியும், கவிகளின் அந்தக்கரணத்திலிருந்து பொங்கும் கற்பனை ரசத்தில் கலந்து இருப்பதை நாம் அறிவோமல்லவா ?

உள்ளத்தின் நாகரிகம் யாது? அஃது எப்படி நமக்குக் கைகூடும்? "ஐயோ, நமக்கு நல்ல மனப் பான்மை வேண்டுமே. எல்லாப் பூதங்களுக்கும் பொதுவான உயிர்வாழ்க்கையை நாம் யோக நுகர்ச்சி யால் அறிந்து உணர வேண்டுமே" என்று நம்முள் ளிருக்கும் தியாக புத்தியானது ஆவல்கொண்டிருக் கிறது. இதனையன்றி வேறு வஸ்துக்களில் அஃது ஆசை வைப்பதில்லை. ஆனால் உலகப் பற்று என்பது கூடவேயிருந்து நம்மை ஆட்டிவைக்கிறது. வித்வா னென்று சொல்லும் ஒவ்வொருவனும் பொருள்களின் உண்மையை யறிந்து, அவ்வறிவால் பிரதிபலிக்கும் அபிருசிகளைப் பெறுகிறான். எக்கருமங்களையும் அவன் பிரியத்துடன் செய்கிறான். தன் நிதான புத்தியை மட்டிலும் கைவிடுவதில்லை. பொருள் யாவற்றையும் நன்கு விலைமதிக்க அவனுக்கு இயலும். 'அளவின்கண் நிற்றல்' என்ற அப்பியாசம் அவனுககே உரியது' ஆங்கிலக் கவியாகிய மில்டன் இதையே புகழ்ந்து' "உன் வாழ்நாளில் அதி சீக்கிரமாகவே நீ அளவின் கண் நிற்பதற்குப் படிக்கவேண்டும்; நல்ல இயல்புள்ள சுகத்தை அடையக் கற்றுக்கொள்" என்னும் பொருள்

படப் பாடியிருக்கிறார். ஒருவாறு அவர் கருத்தைச் சிறிது மாற்றிச் சொல்லுகிறோம் என்று தோன்றலாம். ஆனால் மில்டன் கவியின் கருத்து இந்தச் சந்தர்ப்பத்துக்கும் பொருத்தமானதே. மதப்பற்று அவருக்குப் பலமாயிருந்த போதிலும் பால்யதசையில் அவர் மதம் அதிகக் கடுமையாயில்லாமல் சுககரமாகவே யிருந்தது. அஃது அவரிடம் நிறைந்த கலியாண குணங்களைச் சேர்த்தது.

ஆனால் மதச்சார்பு ஒன்றுமில்லாமலே ஒருவன் தன் அக வாழ்க்கைக்கும் புறவாழ்க்கைக்கும் இனியதான ஒற்றுமையைக் கொள்ளமுடியும். லௌகிக தர்மமும் ஞானவாழ்வும் ஒருங்குசேர்ந்து அவனிடம் பரிமளிக்கலாம். அவனே பாக்கியவான். அவன் ஆஸ்திகனாயில்லாமற் போனாலும் அவனிடம் சுகமாகவே செம்பொருளாகிய விளக்கு ஒன்று இருக்கிறது. "என்னுடைய விளக்கை நீரே ஏற்றவேண்டும்" என்று ஓர் இஷ்ட தேவதையைப் பார்த்து அவன் சொல்லவேண்டியதில்லை. அவனிடத்தில் மதவெறி ஒன்றும் இல்லாததால் அழகுபெற நிதானமாய் அவனுள்ளத்திலுள்ள ஞான விளக்கு எரிகிறது.

சௌபாக்கியமுள்ள இந்த ஞானமானது காவிய நூல்களைப் பயின்றும் சரித்திர சாஸ்திரச் சுவையை அருந்தியும் மனிதனால் அடையக்கூடியது. கலைப் பயிற்சியின் பயனாகிய புத்தி சாதுர்த்தியத்தாலும் அஃது உண்டாகின்றது. இக்காலத்திலுள்ள தத்துவ சாஸ்திரப் பயிற்சியும் விசால புத்தியைக கொடுத்து,

அகங்காரத்தைக் குறைத்து, உள்ளக் கொதிப்பை நீக்கி நமது புத்தியின் ஆக்கத்தை எவ்வாறேனும் தேடச்செய்கிறது. ஞானம் அடைவதற்கு இக்காலத்தில் தனித்தனியே அனேக லௌகிகமான வழிகளிருக்கின்றன. ஆனால் ஒருவனுக்குச் சுயமாக அதிர்ஷ்டமிருந்தால்தான் இந்தத் தெய்வசம்பத்து கைகூடும்; உடல் நலம் மனநலம் என்பன இயற்கையாய் ஏற்படும்; பிறகு அருட்செல்வம் எளிதாய்க் கிடைக்கும். ஆண்மக்களின் ஆண்மையையும் பெண்மக்களின் குண அழகையும் மேன்மைப்படுத்தும் விதம் இதுவே. ஆனால் அப்பியாசத்தினாலும் இந்தப் பாக்கியத்தைச் சிறிது சிறிதாய் ஒருவன் சேர்த்துக்கொள்ளலாம். எந்தச் செயலிலும் நடுநிலையில் நிற்பது, தராதரம் பார்ப்பது, சுற்றும் நோக்குவது, முயற்சியிலும் இளைப்பாறுதலிலும் உபசாந்தத்தையடைவது, சேர்ப்பதிலும் செலவிடுவதிலும் அப்படியே துறப்பதிலும்-ஓர் அமைதியைப் பெறுவது, எண்ணாத எண்ணங்கள் எல்லாம் எண்ணுவதிலும் அவற்றிலிருந்து பிரிந்து மனத்தைத் தன் வசப்படுத்துவதிலும் சாமர்த்தியம், சர்வபோகங்களு மடங்கிய நகரத்தின் அதிபதியாயிருக்கும்போது மலைப்பிராந்தியத்தில் ஓர் ஆடுமேய்ப்போன் குடிசையிலிருப்பதுபோல் நினைத்துக் கருமங்களைக் கையாளுதல் என்னும் இவை தாம் வித்வான் என்பவனுக்கு ஞானமயமான வைபவத்தை அளிக்கின்றன. ஓர் ஆங்கிலக் கவி தன் நண்பர் ஒருவரைப் பற்றிப் பின்வருமாறு பாடியிருக்கிறார்:

"வெகுளியால் மனம் திரிந்து சுணங்காமல், உலக வதந்திக்கு அஞ்சாமல், காம்பீர்யமும் அடக்கமும் மேற்கொண்டு

கர்வமின்றிச் சரசியாய்ப் பேதைமையும் கேவலம் இன்பப் பற்றும் இல்லாமல் வாழ்க்கை புரியும் நியமமுடையவர்"

இங்ஙனம் மனிதனுக்கு ஆண்மையும்சாத்விகமும் ஒருங்கு சேர்ந்து அதிசயமான அருட் செல்வத்தைப் பயக்கும். ஆனால் சாத்விகம் ஒரு பெரிய நெருப்பைப் போல் அமிதமான வல்லமை பெற்றதாகும். சுத்த யோகிகளின் பலம் அவ்விதமே வாய்ந்தது. இதே மாதிரி லௌகிகமான செயல்கள் யாவும் புஷ்டியும் பராக்கிரமமும் வாய்ந்தவை. அவை இக்காலத்து மனிதரின் முன்னிலையில் அழகும் ஆடம்பரமும் பெற்று மேன்மேலும் அவர் சிந்தனையைக் கொள்ளை கொள்ள வில்லையா? ஜனநாயகத்தின் வாழ்த்தும் ஆராதனமும் அவற்றிற்கே செல்லுகின்றனவல்லவா? வரங்கள் கொடுக்கும் கடவுளும் லௌகிகரேயல்லவா? வலித்து வீங்கிப்போன கைகளுடனும் புண்பட்ட கால்களுடனும் நாம் தோண்டித் தோண்டி மண்ணைக் குவித்துக் கல்லை ஒன்றின்மேலொன்றாய் அடுக்கி, லௌகிக தெய்வத்திற்கு எல்லா விதத்திலும் கோயில் கட்டுகிறோம். அக் கோயில்கள் நமக்கு வீண் போகவில்லை; ஒருவித அறிவும், உபசாந்த நிலையும், அவை பிரதிபலித்துப் பெருகும் செயல்களும், சரித்திரக் கிளர்ச்சிகளும், செவிக்கெட்டும் புஷ்டியுள்ள கீதங்களும், இன்னும் செவிக்கெட்டாத மிக இனிய கீதங்களும் நமக்கு லௌகிக தர்மத்திலிருந்து வரும் நலங்களல்லவா? ஆனாலும் திருவள்ளுவர் கூறுவதை நாம் மறக்கலாமா?

"இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

பயமின்மை

பயம், பொய்மை என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று உட்பட்டவை. இக் கருத்தைச் சிந்தித்தே பாரதியார்

> "பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்மைப்
> பாம்பை பிளந்துயிரைக் குடித்தோம்"

என்று பாடியிருக்கிறார். அப்படியே தைரியமும் உண்மையும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. பாரதியாரின் கருத்து என்னவென்றால் பொய்மை நீங்கினால் பயமும் நீங்கும்; அப்படியே பயம் நீங்கினால் பொய்மை நீங்கும். பொய்மையாவது அஞ்ஞானம்; பொருள்களின் இயல்புகளையும் தாரதம்மியங்களையும் தப்பாய் அறிவது. எதை விரும்பவேண்டும், எதை வெறுக்கவேண்டும் என்று அறியாமலே ஒரு பொருளை இழந்து விடுகிறோமேஎன்று பயங்கொள்வது நம்மியல்பாயிருக்கிறது. நாம் ஆசைவைத்திருக்கும் நம்முடல், நம்முறவினர், நம்முடைய பொருள், நம்முயிர் முதலியவற்றை இழக்கவா, என்றேபீதியடைகிறோம். தத்வத்தைக் கைப்பற்றினால் இவ்விதமான "பயமெனும் பேயை" அடித்துக்கொன்று விடலாம். இக் கருத்தை அடிப்படையாக வைத்துத்தான் காந்தியடிகள் மக்களுக்குத் தைரியப் பயிற்சியை உண்டாக்குகிறார்.

தைரியப்பயிற்சி நம்முடைய மக்களுக்கு அத்தியாவசியமானது. உடல் வலிமையினால் பெற்ற தைரியம் ஒன்று. அதைப் பழிக்கலாகாது; அது வேண்டும். பிறகு சிந்தையிலிருந்து பொய்மையை விலக்குவதால் உண்டாகும் தைரியமும் வேண்டும். ஆளைக்கண்டால் நடுங்கும் சுபாவம் என்னிடத்தில் இப்பொழுதும் இருக்கிறது. இதற்குக் காந்தி மருந்து என்னவென்றால் "உடல் அடிபட்டு வருத்தமடைவதற்குத்தான் பிறந்தது, ஆன்மா அப்படியன்று. உடலை ஹிம்சை பண்ணட்டுமே, அப்பொழுதும் தைரியமாயிருப்பேன்" என்று தன்னையே தைரியப்படுத்திக்கொண்டு எடுத்த காரியங்களை எதிரிகள் முன்னிலையிலேயே நடத்தவேண்டும். அப்படியில்லையானால் எதிரிகளை நாமே முந்தி அடித்துவிட்டுப் பதில் அடி வாங்குவதைப் பொருட்படுத்தாமல் சண்டை போட்டுக்கொண்டே இருக்கவேண்டும். கடைசியில் எதிரிகளே பிரமித்துப் பின்வாங்குவார்கள், அல்லது சுற்றியிருக்கிறவர்கள் நம்முதவிக்கு வருவார்கள். இதுதான் மேற்கத்திய நாடுகளின் தைரிய முறை. ஜப்பானியரின் தைரியமுறை இரண்டு வழிகளிலும், உள்ளாண்மை, வெளியாண்மை, (passive, active) கலந்தது. உக்கிரமாகத் தீங்கு செய்தால் அதிலிருந்து கொழுப்பும் தைரியமும் உண்டாகும். இது ஈனமான க்ஷத்திரிய தருமம், பயங்காளித்தனத்தை விட இது மேலானதே.

ஒரு ஜாதியார் முழுவதும் பயங்காளிகளாய் மடிந்து போவது உலகத்துக்கே அவமானம். இந்திய

ராகிய நாம் அங்கிலேயிலிருக்கிறோம். சென்ற எண்பது வருடங்களாக முற்றிலும் அப்படியே இருக்கிறோம். சிறந்த ஞானிகளும் தேச வீரர்களுமாகிய திலகர், அரவிந்தகோஷ், காந்தி, ஸாவர்க்கார், ஜவாஹர்லால் முதலியோர் இந்தச் சாதி சாபத்திற்கு விமோசனத்தைக் கண்டு பிடிக்க முன்வந்திருக்கிறார்கள். காந்தி ஒருவரே, பழைய வழியாகிற ஆத்மஞான வழி ஒன்றே பயத்தை நீராய் உருக்கி ஓட்டி நம்முடைய உடலிலிருந்தும் உயிரிலிருந்தும் அதை விலக்குவதற்கு வன்மையுள்ள வழி என்று எடுத்துக்காட்டியும், நடத்திக் காட்டியும் நம் ஜாதியாரைச் சிறிது உய்விக்கச் செய்திருக்கிறார். இப்பழைய மந்திரம் யாது? அது பாகவதத்தில் பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

ஏவமாத்மான மாத்மஸ்த மாத்மனைவாம்ருச ப்ரபோ
புத்யானுமான கர்பிண்யா வாஸுதேவானு சிந்தயா:
சோதிதோ விப்ரவாக்யேன நத்வாம் தக்ஷ்யதி தக்ஷக:
ம்ருத்யவோ நோபதக்ஷ்யந்தி ம்ருத்யூனும் ம்ருத்யுமீஸ்வரம்:
அஹம் பிரஹ்ம பரம்தாம ப்ரஹ்மாஹம் பரமம்பதம்
ஏவம் ஸமீக்ஷன்னாத்மான மாத்மன்யாதாய நிகஷ்கலே:
தசந்தம் தக்ஷகம் பாதே லேலிஹானம் விஷானனை:
நத்ரக்ஷ்யஸி சரீரம் ஸுவிஸ்வம்ஸ ப்ருத காத்மன:

(இவ்விதம் தன்னுள்ளிருக்கும் ஆத்மாவை ஆத்மாவாலேயே சூழ்க. புத்தி அநுமானம் நிறைந்த வாஸுதேவர் அனுஸ்மரணையிலே ஆத்மாவைச் சூழ்க. பிராமணன் ஆணையினால் தூண்டப்பட்ட தக்ஷகன் உன்னைக் கடிக்கமாட்டான். யமன்களுக்கு யமனான பரம் பொருளை யமன்கள் தீண்டமாட்டா. நானே பிர்மா. பரம்பொருளிருப்பிடம். பரமபதம்

என்று ஆத்மாவை வெறுப்பு, கலக்கம் இவை யன்றி நினைத்துப் பார்த்துக்கொண்டேயிருந்தால் விஷ நாக்குகளினால் காலை நக்கிக் கடிக்கும் தக்ஷகனையாவது, உன் உடலையாவது, இந்த விச்வமாகிற பிரமத்தையாவது வெவ்வேறு என்று காணமாட்டாய்.)

இதற்கும் பாரதியாரின் முரசடித்தலுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமையைப் பாருங்கள்.

பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்மைப்
பாம்பை பிளந்துயிரைக் குடித்தோம் :
வியனு லகனைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்

(ஜயபேரிகை—கொட்டடா)

இந்தியாவின் ஆன்மாவுக்குரிய தைரியப் பயிற்சி இவ்விதமாக உண்டாகவேண்டுமென்று காந்தி விளக்கிக் காட்டுகிறார். சமீபத்தில் ஐரோப்பாவில் அடிபட்டு முறிந்துபோன செந் சாதியாருக்கு இவ்வுபதேசத்தைக் காந்தி பணிவுடன் அளிக்கிறார். வடமேற்கு எல்லைப்பிரதேசத்திலுள்ள தீரப் பட்டாணியரில் ஒரு கோஷ்டியினரான கடவுள் தொண்டர் என்ற அப்துல் கபூர்கான் சீடர்களும் அப்பியாச வழியிலும் வைராக்கிய வழியிலும் இந்தச் சிறந்த சன்மார்க்க வீரத்தை நம் கண் முன்னேயே பழகி வந்திருக்கின்றனர்.

ஆனாலும், ஒரு பெரிய தேசத்தின் நிரந்தரமான, சாதாரணமான, பொதுப் பழக்கமான அரசியலில் இந்த வைதிக தரும தத்வமானது எவ்வாறு தலை

சிறந்து உருவத்தைப் பெறும் என்று சொல்வது எளிதன்று. பார்க்கப் பார்க்கத் தெரியும். ஐரோப்பாவிலும் இவ்வித ஒரு கோஷ்டியினர் (Peace Pledge Union) இருக்கின்றனர். அதில் கேவலம் தெய்வப்பற்றில்லாத Aldous Huxley முதலிய நியாயவாதிகளும் இருக்கிறார்கள். பொங்கி வழியும் ஜீவ தயையும் கடவுள் நம்பிக்கையும் குடிகொண்டிருக்கும் மேலோர் அந்த கோஷ்டிக்குத் தலைவர்களாகவும் இருந்திருக்கிறார்கள் (Dick Sheppard முதலியவர்கள்) சமீபத்தில் பார்லிமெண்டு சபையில் ஜேம்ஸ் மாக்ஸ்டன் முதலியவர்கள் அதை அநுசரித்து வோட்டுக் கொடுத்தார்கள், சேம்பர்லினுக்குச் சாதகமாக. ஆனாலும் காலஞ்சென்ற பிரஸிடெண்டு மாஸரிக்கு (அவர் தேசமாகிய 'செக்கோஸ்லோவாகியா' வும் காலஞ் சென்று விட்டதே!) கூறியதாவது: "நீயும் உன் எதிரியுமாகிய இருவர் த்வந்த யுத்தத்துக்குத் தயாராயிருக்கிறீர்கள். ஒருவர் அந்த யுத்தத்தில் கொலையுண்டு இறக்கவேண்டும். நீ இறந்தாலும் உன் எதிரி இறந்தாலும் ஒருவரே மாய்கிறார். அப்படியானால் அவனே போகட்டும். இதில் என்ன அநியாயம் இருக்கிறது? ஏன் அவனை நீ முன்னமேயே அடித்துக் கொன்று விடக்கூடாது?" என்பது. இதில் சாரம் உண்டு என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் காந்தி சொல்வது "உன் கையோங்கக் கூடாது. அவன் உன்னைக்கொல்லட்டும். ஆனால் சிறிதும் பயந்து பின் வாங்காதே." இது நம்மால் முடியுமா என்று கேட்கிறேன். எப்படியும் எதிரியைக் கொல்லக்கூடியவனுக்குத்தான் இந்தப் பரிபக்குவம்

உண்டாகும், மேலும் அவன் உள்ளத்தில் எப்பொழுதும் தெய்வபக்தி ஓடிக்கொண்டிருக்க வேண்டும். ஆகையால் முதன் முதலில் எதிரியைக் கொல்வதற்குள்ள வீரம் நமக்கு வேண்டும். ஒருவன் வாழ்க்கையிலும் "அறம் வளர்க" என்பதற்கு முன் "மறம்" பலமாயிருக்க வேண்டும். ருதத்தன்மையும் நாணயமும் சேர்ந்தது மறம். ஆகையாலே "உண்மையும் ராஜஸமும்" என்பது "உண்மையும் அஹிம்சையும்" என்ற காந்தி உபதேசப்பொருளுக்கு அடிப்படையானது என்று நான் நினைக்கிறேன்.

முன்னேற்றம்

சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ — நன்னெஞ்சே
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடிவளராதோ? — நன் னெஞ்சே.

நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான கொள்கைகளையும் அவற்றிற்குப் பொருத்தமான பொங்கும் மனத்திடனையும், நாம் எவ்விதத்திலோ இப்பொழுது கைப்பற்றவேண்டும். இதற்குச் செம்மையான உள்ளத்தின் உயர்வே முக்கிய ஆதாரமாகும். தனிப்படையான மனிதனானாலும் சரி, ஒரு ஜன சமுகமானாலும் சரி, இவ்வண்ணம் அவர்களுக்கு அலைபோல் பொங்கும் உணர்ச்சியும், மலைபோல் உயரும் சிந்தனையும், அவற்றிற்குப் பொருத்தமான முயற்சித்திறனும் உண்டாயிருத்தல் வேண்டும். யாவற்றிலும் முக்கியமாக நன்மையும், இன்பமும், நாட்டு வளமும், அழகுவாய்ந்த மனித வாழ்க்கையும் எப்படியும நமக்குக் கிடைத்தே தீரும் என்ற பூரண நம்பிக்கை நமக்கு வேண்டும். "சிப்பியிலே நல்லமுத்து விளைந்திடுஞ் செய்தி யறியாயோ"

மேலும், நாம் ஆதிகாலம் முதல், நாகரிகத்திலும், புத்தி நுட்பத்திலும், கைத்தொழிற் றிறனிலும், மேன்மையுள்ள ஜாதியாராகவே யிருந்து வருகிறோம். ஏதோ தேச அரசியலுக்குச் சாதகமான ஸ்தாப

னங்கள் சென்ற ஆயிரம் நூற்றூண்டுகளாக நமக்குக் கைகூடவில்லை. இன்னும், தனிப்படையான போர் வீரர்களும் தளபதிகளும் நம் நாட்டில் ஒவ்வொரு நூற்றூண்டிலும் மலிந்து கிடைத்தபோதிலும் " இந்த அகில இந்தியா தேசத்தையே நாம் போற்றிப் பாது காக்கவேண்டும் என்ற சிறந்த லக்ஷியம் நமக்குப் புலப்படாமலே போயிருந்தது. சிற்றரசர்களும், அவர் களுக்கடங்கிய ஒரு சிறிது விஸ்தாரமான ராஜ்யங் களுமே இந்தியாவில் அடிக்கடி கிளம்பி வளர்ந்து பிறகு மெலிந்து உடைந்து பங்கமுற்றுப் போயின. ஆனல் இந்து மன்னர்களின் ஏகாதிபத்திய ஆட்சியும், மகம்மதியச் சக்கரவர்த்திகளின் தீவிரமான செங்கோல் முறையும், கடைசியிலுதித்த ஆங்கிலேய அரசாட்சியும், தனித்தனியே, இத்தேசத்து மக்களை ஒன்றுசேர்த்து அரசாளும் சாதனங்களாக இருந்து வந்திருப்பது தெளிவாகும். இருந்தாலும் இந்துதேசமக்கள் எல்லாரும் ஓர் குலத்தார் என்ற உணர்ச்சி சமீபகாலத்தில் தான் நம்மவரிடத்தில் உண்டாயிருத்தல் யாவரும் அறிந்த செய்தியாகும். இவ்வுணர்ச்சியை நன்குவளர்த்துப் பிரபலமான உயிர்ப் பொருளாசு ஆக்கிக்கொள்வது நம் ஜாதியரின் முதல்கடமையே, "சிப்பியிலே" தேசமுன்னேற்றம் என்ற "நல்ல முத்து விளைந்திடுவது" முற்றிலும் ஐயமற்ற சமூகக்கொள்கையாக விளங்கி, ஊர்ஜிதப் படவேண்டுமென்று நமது அறிஞர் யாவரும், மற்ற மக்கள் எல்லோரும் எதிர்பார்க்கின்றனர்.

"ஒன்று பட்டாலுண்டுவாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே"

இதை எப்பொழுதும் மனப்பாடம் பண்ணிக் கொண்டு எல்லா இயக்கங்களிலும் ஈடுபடவேண்டும்.

சர்வஜாதி ஒற்றுமையை எந்த விதங்களில் பாது காத்துக்கொள்ளலாம் என்று நாம் சதா ஆலோசனை செய்யவேண்டும். ஆலோசனையில் யாது பயன், காரியத்திலல்லவோ காட்டவேண்டும் என்று மக்கள் நினைக்கலாம். அப்படியல்ல, சகஜமாய் நமக்குள் வேற்றுமை உணர்ச்சியே முன்வந்து நின்று அரிய காரியங்கள் யாவையும் பாழாக்குகின்றன. இதற்கு மருந்து தேடவேண்டும். கல்வியும் அடக்கமும், சீரிய தேசபக்தியுமே, ஜாதி வேற்றுமை உணர்ச்சியை, உள்நோய்க்குப் பக்குவமான சிகிச்சை செய்யக்கூடும். சந்ததமும் அந்நோயோடு போராடியே நம்முடைய நற்குணங்கள் அதை நசிக்கி அழிக்கவேண்டும், தனிப் படையாக மனிதர் தங்களின் ஜாதிவேற்றுமை உணர்ச்சியை இவ்விதமே அடக்கியாளக்கூடும். பொது ஜனங்களோ சதாகாலமும் "நந்தேசம் ஒன்றே ஜாதி ஒன்றே" என்ற பொருளை, பழைய மதங்களின் சுவையைவிட இன்பம் பயக்கும் வேதப்பொருளாக நினைக்கலாகும். தேசாபிமானிகள் யாவரும் நம் பொது மக்களுக்கு இப்புத்தியைப் புகட்டவேண்டும்.

நமது கலாசாலைகளில் இந்த ஐக்கியபாவமானது செம்மையாய் வளர்க்கப்படவேண்டும். அநேக கல் லூரிகளில் பொதுவாக பழைய மதப்பழக்கங்களையே மாணுக்கர்கள் அனுசரித்து வருகிறுர்கள். ஆனுலும் சமத்துவ உணர்ச்சியைத் தழுவிய பழக்கங்களும் அவர்களுக்குப் பிடிபடுகின்றன. அது முற்றிலும்

போற்றத்தக்கது. ஆசிரியர்கள் பெரும்பாலும் புதிய மாதிரி வாழ்க்கையைக் கையாளுகிறவர்களாயிருப்பது நலமாகும். ஆகையால் சமூக ஐக்கியத்திற்கு நமது கல்விஸ்தாபனங்களிலிருந்துதான் அடிக்கடி புத்துயிர ளிக்கும் ஊக்கமானது பெரிய ஆறுகளைப்போல் பரவி ஓடவேண்டும்.

பழைய மதங்களையே முற்றிலும் புறக்கணித்துப் புதிய "சமதர்ம"க் கொள்கைகளையே உத்தாரணம் செய்யவேண்டும் என்று ஒரு கட்சியார் வாதிக்கின் றனர். மதக் கொள்கைகளைச் சீர்திருத்தம் செய்வதற்கு அம்மதங்களிலும் மற்றும் ஜனங்களின் ஆற்றலிலு மேயே போதிய சக்தி இருக்கிறது. ருஷியா தேசத்தில் கூடத் தற்போது ஒவ்வொருவரும் தங்கள் மதத்தை அனுசரிக்கலாம், ஆனால் ஒரு மதப்பற்றுமில்லாத "கம்முயீனிஸ்டு' கட்சியில் சேர்ந்தவர்தான் தேசத் தைப் பாதுகாத்து வந்து சமூக ஆட்சியை வகிக்கலாம் என்ற பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவி லுள்ள மதங்களை நாம் முற்றிலும் அழிக்கத் தலைப்படு வது அனுவசியம். மேலும் அது அசாத்தியமான காரியம். ஹிந்து மதக்கொள்கைகளைச் சீர்தூக்கிப் பார்த்து அவைகளில் நமது முன்னேற்றத்திற்கு இசையாத கொள்கைகளைக் கைவிட்டுவிடுவது வெகு சாத்தியமான காரியம். மேலும் ஹிந்துக்கள் தங்கள் மதத்தை முற்றிலும் துறந்துவிட்டாலும் மகம்மதியர் ஒருநாளும் தங்களுடைய மதத்தை விட்டுவிடமாட் டார்கள். மதத்தை முற்றிலும் விட்டுவிடாமல் எவ் வளவு தூரம் தற்கால நாகரித்தை அங்கீகரிக்கலா

மென்பது உலகத்திலுள்ள எல்லா மதத்தினருக்கும் தெரிந்த வழி, அவர்கள் அப்படியே செய்கிறார்கள். மேல்நாட்டுக் கிறிஸ்தவ ஜாதியினர் என்ன செய்கிறார்கள்? தங்கள் ஜாதி முன்னேற்றத்தையே லக்ஷியமாக வைத்துக்கொண்டு மதத்தைச்சார்ந்த முயற்சிகளை ஒரு பழக்கமாக, அதாவது தனி மனிதன் தர்மமாகப் பாராட்டுகிறார்களே யொழிய வேறென்ன? ஆனால் ஒன்று மட்டும் சொல்லியாக வேண்டியிருக்கிறது. மனிதருக்குள் உயர்வு, தாழ்வு, செல்வச் செருக்கு, வறுமைத் தாழ்வு என்ற வித்தியாசங்கள் அடியோடு எடுபட்டுச் சமத்துவ உலகம் ஊர்ச்சிதமாய் ஸ்தாபிக்கப்படவேண்டும். மனிதரின் பொருளாதார வாழ்க்கையில் பூரண சமத்வத்தை முதன் முதலில் நிறுவவேண்டும். அதை யொட்டி அரசியல் வாழ்க்கையில் பூரண சமத்வம் ஸ்தாபிக்கப்பட்டேயிரும். மனிதரின் தனி மதங்களும், இன்னும் மற்ற புத்தி பூர்வ கொள்கைகளும் ஒரே சமமாய் விடும் என்பது அசாத்தியம். மனிதனுக்கு மனிதன் தன் வாழ்க்கையின் இணைப்புக்களிலும் உள்ளக் கிளர்ச்சியிலும் சில அம்சங்களில் வேறுபாட்டுடன் அமைந்தே காணப்படுவான். ஒற்றுமை என்றால் மானிட ஜன்மத்தின் நுண்ணிய உயரிய வாழ்க்கைக்குரிய பழக்கங்கள் எல்லாவற்றையும் ஒரே மட்டமாக ஆக்குதலன்று. "மாந்தர் தம் முள்ளத்தனைய துயர்வு"

ஆனால் இப்பொழுது நம் தேசத்தில் நாம் தீவிரமாகப் பரப்பவேண்டிய கொள்கைகளெல்லாம்,

"சமதர்மம்" அல்லது வேற்றுமையில்லா வாழ்க்கை, என்ற புதிய நாகரிக தர்மத்தைத் தழுவியதாகவே யிருக்கவேண்டும். அதற்கு ஆங்கிலத்தில் "ஸோஷலிஸம்" என்று பெயர். அது ஐரோப்பாவில் எடுத்திருக்கும் வடிவைத்தான் இங்கேயும் எடுக்கவேண்டுமென்று சொல்ல முடியாது. அது அநேக முயற்சிகளடங்கிய ஒரு முயற்சி. தற்போது பொதுஜன ஸ்தாபனக் கட்சிகள் எல்லாவற்றிற்கும் மேலான கட்சி ஒன்று பிறக்கவேண்டும். அதை உண்டாக்குவதற்கு இன்னும் மகிமையுள்ள தலைவர்கள் ஏற்படவில்லை; இன்றைக்கோ, நாளைக்கோ தெரியவில்லை, அவர்கள் தோன்றுவது. அவர்கள் உதித்தே ஆக வேண்டும்.

> "நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
> நையப் பாடென்றொரு தெய்வங் கூறுமே!
> கூட்டி மானிடச் சாதியை யொன்றெனக்
> கொண்டு வைய முழுதும் பயனுறப்
> பாட்டிலே யறங் காட்டெனுமோர் தெய்வம்!"

இதற்கு இவ்வித்தகர்களின் பேராற்றலின் பயனாக

> "குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
> கொடிவளராதோ?— நன்னெஞ்சே."

அதுதான் இந்தியரின் சமதர்மம்.

பாரதி திருநாள்

11—9—41

நாம் பாரதியின் திருநாளைக் கொண்டாடத் தொடங்குமுன், அவரைப் போன்ற " வீரியவாசகம்" அளித்திருக்கும் நம் நாட்டுப் பெரியார்களை நாம் எவ்வாறு வழிபடுகிறோம் என்பதைக் கருதவேண்டும். பொதுவாகக் கூட்டங்கூட்டுவதிலும், சிற்சில பிரசங்கங்களை நடத்துவதிலும், அப்பெரியவர்களின் ஞாபக தினங்களைக் கழிப்பதைத் தவிர நாம் என்ன செய்கிறோம்? அவர்களின் சீரிய கொள்கைகள் சிலவற்றை யாவது நம் வாழ்க்கையில் புகுத்தி, பாரதியார் பாடியிருக்கும் வண்ணம்,

> " அமரர் தூதன் சமரநாதன்
> ஆர்த்தெழுந்தானே—இந்நேரம்
> குமரிமைந்தன் எமது வாழ்விற்
> கோயில் கொண்டானே—இந்நேரம்"

என்று உயிர்த்தெழுந்து நம் கருமங்களைச் செய்யப் புறப்படுகிறோமில்லையே? நம்முடைய பலவீனத்தையும், ஊக்கமின்மையும் நினைத்து நினைத்து நெஞ்சுருகி வாடினார்களே, நம் தலைவர்கள் எல்லோரும்? ரவீந்திரநாத தாகூரும் அப்படியே வருந்திக் கதறினார்; பாரதியும் அப்படியே கருதிக் கருதிக் கவலைப்பட்டு அலறியிருக்கிறார். சாதாரண ஜனங்களைச் சொல்லிப் பயனில்லை. நம் மக்கள் சரித்திர பரம்பரையாயுள்ள துன்

பத்துக்குள்ளாகிச் சக்தியற்று ஒடுங்கியிருக்கிறார்கள். ஆனால் சிறிது செல்வமும், சுகமும், கல்வியும், ஜாதீய மான உயிரும் உணர்வும் பெற்ற படித்தவர்களாகிய நாம், இத்தாழ்மையை மாற்ற இடையறாது உழைத் தாகவேண்டும். படித்தவர்களில் முதியவரும், இளை ஞரும் ஒன்றுகூடி நம் ஜாதியாரின் வன்மையைப் பலவிதத்திலும் பெருக்க வேண்டும். அஃதொன்றே நம் தேசத்தினரை எக்காலமும் கீழ்ப்பட்டவராக வைக்கக்கருதும் சர்ச்சில் போன்ற பிரிட்டிஷ் தலைவர் களுக்கு நாம் கொடுக்கும் பதில் ஆகும். வெறும் கோபத்தினால் சிறிதும் பயனில்லை. ஆனால் ஒரு கட் சியை ஒட்டிக் காரியங்களை நடத்தாமல், பொதுவான, விரிவான, சூட்சுமமான வழிகளின் பயன்களைத்தேட வேண்டும். இதற்குக் கவிகளாயும், நபிகளாயும், தோன்றிய பாரதியார், ரவீந்திரர் முதலியோரின் கிரந்தங்களைப் பக்தியுடன் படித்து அவர்களின் கருத் துக்களைத் தன்மயமாக்குவது நமக்கு முக்கியமான வேலையாகுமல்லவா ?

கவியானவன் அழகுத் தெய்வத்தைப் பேணி, நல்லது பேசி, மக்களை இன்புறச் செய்யும் வேலை யிலேயே அமர்ந்திருப்பானென்று நினைப்பது தவறு. பழைய இத்தாலியக் கவி டாந்தேயைப்பற்றி பிரௌனிங் என்ற ஆங்கிலக் கவி என்ன சொல்லுகிறார் ?

"Dante, who loved well because he hated,
Hated wickedness that hinders loving"

"அன்பைத் தடுக்கும் கொடிய வெறுப்பையே வெறுத்து, அன்பையே வளர்த்தான் கவி தாந்தே"

என்று கூறியிருக்கிறார். இந்த வாக்கியம் நம் பாரதியாருக்கு மிகப்பொருத்தமாயுள்ளது.

"பயமெனும் பேய்தனையடித்தோம்—பொய்மைப்
பாம்பைப் பிளந் துயிரைக்குடித்தோம்"

அஃதினாலேயே

"வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்
வேதவாழ்வினைக் கைப்பிடித்தோம்—
ஜெயபேரிகை கொட்டடா,"

என்று பாரதியார் பாடியிருக்கிறார். இவ்வுட்கருத்தை கொண்டதுதான், நிதானக்கட்சியார்களையும், மற்றப் போலித் தேசியம் பூண்டவர்களையும் அவர் அடிக்கடி இகழ்ந்து பாடியிருப்பது என்று சொல்லலாம். உண்மையாக, பாரதியாரும் பகைவர்களை அற்பத்தனமாய் வெறுத்தலோ, இகழ்தலோ தகாது என்றே நினைத்தவர். தன் சொந்த வாழ்க்கை இன்னல்களில் மூழ்கி வருந்தும் காலத்தும், தேசக்குழப்பத்தில் ஆண்மையை அகற்றி வீண் நடவடிக்கைகளைப் பலர் நடத்துவதைப்பார்த்துப் 'படமுடியாது இனித் துயரம்' என்று கதறும்போதும், பாரதியார் நம் தேசத்திற்குத் தெளிவு பிறக்க வேண்டும் என்று தவம் புரிந்து வந்தார்.

"எல்லா மாகிக் கலந்து நிறைந்தபின்
ஏழைமையுண்டோடா ? — மனமே
பொல்லாப் புழுவினைக் கொல்ல நினைத்தபின்
புத்திமயக்கமுண்டோ ?"

என்று உறக்கக் கூவுகிறார், பாரதியார். இப்பொழுதும் - இந்நெருக்கடியிலும் - நம் தேசத்தில்

ஒரு சிறிதும் தேசமக்களுக்குள் புத்தி மயக்கம் போகவில்லையே? பாரதியார் இன்றுயிருடனிருந்தால் பழைய மாதிரியே வருந்திக்கிடப்பாரே? இதை நாம் மாற்ற வேண்டாமா? வாலிபர்களாகிய நீங்கள் இதற்கு பதில் சொல்லுங்கள்.

"கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்
கவர்ந்திடமாட்டாவோ? — அட
மண்ணில் தெரியுது வானம் அது நம்
வசப்படலாகாதோ.
எண்ணியெண்ணிப் பலநாளு முயன்றிங்
கிறுதியிற் சோர்வோமோ? — அட
விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் எண்ணிலு
மேவு பராசக்தியே."

ஒரு சிறந்த பிரஞ்சு ஆசிரியர் கூறுகிறார். "பலவீனமும் தனிப்பட்ட ஓர் தர்க்க வேதாந்தத்துடன் வளர்ச்சியடைகிறது, தீரம் போல". நம் நாட்டினருக்குப் பலவீனத்தின் வேதாந்தம் நன்றாய் வந்திருக்கிறது. தீரம் எங்கேயோ காணோம். ஜூன் 24ம் தேதியன்று மாஸ்கோ நகரிலிருந்து வெளியாகிய ஒலிபரப்புப் பிரசங்கம் ஒன்றில், "ஸோவியத் இளைஞர்கள் வயது வந்தவர்களைப் போலவே தீவிரமாய் உழைப்பது அவசியமென்றும், அவ்வுழைப்பானது கொடிய யுத்த முனையில் வெகுகருக்காய்ச் சுடுவது போலவே, தேசத்தின் வெற்றிக்கு அரண் போன்றது என்றும், இன்று நாம் கருமத்தில் நிபுணர்கள், கருமமே நோக்கமாக உள்ளவர்கள்" என்றும் கூறப்பட்டதை உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். சர்ச்

சில் துரை ருஷ்யா தேசத்தினரை இப்பொழுது எவ்வளவு புகழ்கிறார் ?

"சொல்லொன்று வேண்டும். தேவசக்திகளை
நம்முள்ளே நிலைபெறச்செய்யும்
சொல்வேண்டும்"

என்று கூறி பாரதியார் "சொல்" என்று ஓர் கவி பாடினார். அதன் கடைசி வரிகள் இவை.

"வலிமை, வலிமை யென்று பாடுவோம்--என்றும்
வாழுஞ் சுடர்க் குலத்தை நாடுவோம்
கலியைப் பிளந்திடக்கை யோங்கினோம் — நெஞ்சிற்
கவலை யிருளனைத்து நீங்கினோம்
அமிழ்தம் அமிழ்தம் என்று கூவுவோம் — நித்தம்
அனலைப் பணிந்து மலர் தூவுவோம்
தமிழிற் பழமறையைப் பாடுவோம் — என்றுந்
தலைமை, பெருமை, புகழ் கூடுவோம்."

கவி வாக்கு

கவிஞன், தேசாபிமானி, சித்தன், உலகிற்கெல்லாம் நண்பன், என்று நான்கு விதமாக, சுப்பிரமணிய பாரதியின் வாழ்க்கைப்பயனை மதிப்பிடலாம். தமிழ் நாட்டுக் கவிஞர்களுக்குள் உணர்விலும், நெஞ்சமுருகிச் சொரியும் இன்பக் கவிதையிலும், அனுதி தத்துவ நிர்ணயத்திலும், நவீன சிந்தனையிலும், அவருக்குச் சமான மானவர் யாரும் இல்லை. தேசாபிமானிகளுக்குள்ளே, சுத்தமானதும், புஷ்டியானதுமான ஹிந்து தத்துவத்தைப் போதிப்பதிலும், அகில இந்தியாவின் ஆன்மாவை உருவகப்படுத்துவதிலும் அவருக்கு நிகரானவர் யாரும் இருந்ததில்லை. பாரத நாட்டின் சித்த கோடிகளில் வல்லமை தங்கிய அருட் செல்வம் பெற்றவர் என்றும் பாரதியாரைக் கூறலாம். கடைசியாக, உலகிற்கெல்லாம் நண்பன், வருங்கால அமைப்பிற்கு வழிகாட்டும் தீர்க்கதரிசி, என்று சந்தேகமில்லாமல் அவரைப் புகழலாம். இவ்வளவு சிறப்புவாய்ந்த நம்நாட்டுத் திலகம் ஒருவரை அவர் காலத்திற்குப் பின்னுவது நாம் அறிய முயலுவது போற்றத்தக்கது.

கவியாகவும், ஆக்கம்படைத்த வழிகாட்டியாகவும், பாரதியார் எவ்வாறு புலப்படுகிறுர் என்பதை சிறிது எடுத்துக்கூற விரும்புகிறேன். முதன் முதலாக அவர் தெய்வ பக்தியைக் குறிப்பிடவேண்டும்.

" சீருக்கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும் "
" அன்பென்று கொட்டுமுரசே—அதில்
யார்க்கும் விடுதலையுண்டு "
" ஆன்மவொளிக்கடல் மூழ்கித்திளைப்பவர்க்
கச்சமு முண்டோடா?—மனமே!
தேன்மடையிங்கு திறந்ததுகண்டு
தேக்கித் திரிவமடா!"

இந்த மனப்பான்மையை இக்காலத்து அரசியல் நோக்கமுடையவர்களான வாலிபர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஆனால் இந்தியாவின் பேரறிஞருக்கு அம் மனப்பான்மை சகஜமானது.

இதற்குப் பொருத்தமாக ஒரு லௌகிகக் கொள்கையுண்டு:

" அன்பென்று கொட்டு முரசே—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்:
உடன்பிறந் தார்களைப் போலே—இவ்
வுலகில் மனிதரெல் லாரும்,
இடம்பெரி துண்டு வையத்தில்—இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்
மரத்தினை நட்டவன் தண்ணீர்—நன்கு
வார்த்ததை யோங்கிடச் செய்வான்,
சிரத்தை யுடையது தெய்வம்—இங்கு
சேர்ந்த வுணவெல்லை யில்லை.
வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர்—இங்கு
வாழு மனிதரெல் லோர்க்கும்,
பயிற்றி யுழுதுண்டு வாழ்வீர்—பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்."

"பொருந்த முற நல்வேத மோர்ந்து
பொய்மை தீர, மெய்மை நேர
வருத்த மழிய வறுமை யொழிய
வைய முழுதும் வண்மை பொழிய."

இதுவே நம் தலைமுறைக்கு முந்திய சோஷ லிஸ்டுக் கொள்கைக்காரர்களின் வேதம். ஆனால் இப்பொழுது அது பொய்யாகிவிட்டது. சுப்பிரமணிய பாரதி அப் பழங்கொள்கையை ஆராதித்தவர். அவருக்குச் சரியாக பழைய ருஷ்ஷியாவில் நரேத்நினிக் குக் கட்சியொன்று பரவியிருந்தது. "சிரத்தையுடை யது தெய்வம்," "ஜனங்களை நம்புங்கள்." கொடிய வர் ஆட்சி தானாகவே புகைந்துபோய்விடும்" என் றார்கள் அவர்கள். இதைத்தான் நாம் நம்பவில்லையே?

"பாருக்குள் ளேசமத் தன்மை—தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமைசெய் யாது—புவி
யெங்கும் விடுதலை செய்யும்"

என்று பாடினார் பாரதி. ஆனால் சமத்துவம் சகோத ரத்துவம் என்பவை, கோடிக்கணக்கானவர் இரத்தத் தைச் சிந்தி, போரிலும், தொழிலிலும் தன்வயமாகி யல்லவோ சம்பாதிக்கக் கூடியவை. இதை நவீன ருஷ்ஷிய சரித்திரத்தில் நன்கு காணலாம். எளிதில் மானிடருக்கு விடுதலை வராது என்பதை நம்மில் வயது முதிர்ந்தவர் அறிவதில்லை. பாரதி இவ்வகுப் பைச் சேர்ந்தவர்தான்.

தெய்வ பக்தியிலும் மக்களிடத்தில் நம்பிக்கை யின் பயனாகிய புரட்சி வீரம் (Belief in the People)

என்ற இரு அம்சங்களில் பாரதிக்கும் நவீன அரசியல் வாதிகளுக்கும் வித்தியாசம் உண்டு. ஆனால் மனித உறுப்புக்களாகிய குணதிசயங்களைப் பயிலுவதில் எல்லோருக்கும் ஒரே கொள்கை யிருக்கவேண்டுமே யல்லாது வேறென்ன? எல்லா மனிதரும் உழைப்பு, தியாகம், தைரியம் என்ற மூன்று ஆன்ம குணங்களை ஒரே வண்ணமே பயிலவேண்டும். சிரத்தையே மனிதன். எதில் சிரத்தையுள்ளவனா யிருக்கிறானோ அதுாகவே ஆகிறான் என்று பகவத்கீதை சொல்லுகிறது. இந்த உண்மையை வாலிபர்கள் முக்கியமாக ஆதரிக்கவேண்டும். சுப்பிரமணிய பாரதியின் பிரார்த்தனைகளில் ஒன்றைக் கவனியுங்கள்.

"மொய்க்குங் கவலைப்பகை போக்கி
முன்னோன் அருளைத்துணையாக்கி
எய்க்கு நெஞ்சை வலியுறுத்தி
உடலை யிரும்புக்கிணையாக்கி
பொய்க்குங் கலியை யான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்குங் கிருதயுகத்தினையே
கொணர்வேன், தெய்வ விதியிஃதே."

இந்த வேண்டுதலை யார்தான் கையாளக்கூடாது. வயோதிகர், இளைஞரும் ஒன்றாக விரும்பும் நிலையிஃதல்லவா? ஆனால் எந்த வலிமைகளும் தெய்வங்களை வேண்டிக்கொள்வதனால் மட்டும் கிடைக்கக்கூடியவையல்ல. சதாகாலமும், அதற்குப் பொருந்திய சங்கத்தினாலும் அப்பியாசத்தினாலும் கைக்கு எட்டுமேயல்லாது வாஞ்சையினால் மட்டும் வீரவாழ்க்கைகிட்டாது. இதை மேல் நாட்டார் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

பாரதி கவியே ஒழிய சமூகத்தலைவர் அல்ல. சாதாரண மனிதர்கள் கோஷ்டி கோஷ்டியாகப் பயிலவேண்டிய நவீன தர்மங்கள் கணக்கில்லாமல் இப்பொழுது வளர்ந்து வருகின்றன. இதை அரசாங்கத்தின் தூண்டுதலின்றியே நாம் பயிலுவது சாத்தியமானது, நலமானது. தேச நெருக்கடியில் இங்கிலாந்தில் பொதுப் பயிற்சியாலுண்டாகும் வழக்கங்களையும், தொழில்களையும் எல்லாரும் அனுசரித்து வருகிறார்கள். பயிருண்டாக்கல், நெருப்பவித்தல், குப்பை கூட்டுதல், நகரங்களைச் சுத்தப்படுத்தல், எதிரியின் விமானத் தாக்குதலுக்குப் பந்தோபஸ்து செய்தல், அன்னியர் குழந்தைகளை ஏற்றுக்கொண்டு பாது காத்து வளர்த்தல், யுத்த சாமான்களை ஆக்குதல் இவற்றிலெல்லாம் ஒன்று சேர்ந்து புதிய வீர குணங்களை இங்கிலாந்து ஜனங்கள் பெற்றிருக்கிறார்கள். ருஷ்ஷியாவிலோ நிரந்தரமாகவே இவற்றை பன்மடங்கு பயின்று வருகிறார்கள். இந்தக் கருத்தையும் பாரதி தன் கவியில் உருவகப்படுத்தியிருக்கிறார்.

"எல்லாருமோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாருமிந்தியா மக்கள்
எல்லாருமோர் நிறை எல்லாருமோர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—
இனி யொருவிதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனி யொருவனுக்குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்......"

என்று பாரதி பாடியிருப்பது சமத்துவத்தின் வீர உபதேசமல்லவா? பின்னும்

"கண்ணில் தெரியும் பொருளினைக்கைகள்
கவர்ந்திடமாட்டாவோ?—அட
கண்ணில் தெரியுது வானம் அது நம்
வசப்படலாகாதோ
எண்ணியெண்ணிப் பலநாளுமுயன்றிங்
கிறுதியிற் சோர்வோமோ? அட
விண்ணிலும் மண்ணிலும் தண்ணிலும் எண்ணிலு
மேவு பராசக்தியே."

பாரதியார் இந்தியாவின் இளைஞர்களுக்குக் கூறிய இவ்வீரிய வாசகத்தை நாம் எப்பொழுதாவது மறக்கலாமா? "ஆரியபூமியில், நாரியரும் நரசூரியரும் சொலும் வீரிய வாசகம்" அஃதே. கடைசியாக ஒரு வார்த்தை. பாரதியின் கவிகளைப் படித்துத் துயர் நீங்குதல் கூடுமென்று உங்களுக்கு என் அனுபவத்திலிருந்து கூறுவேன். நவீனத் தமிழர்களின் துயரங்களையும், வாஞ்சைகளையும் தானே அனுபவித்துக் கவிகளில் அவற்றை உருக்கொள்ளச் செய்திருக்கிறார் பாரதி. "எனக்கு முன்னே சித்தர் பலரிருந்தாரப்பா, யானும் வந்தேனொரு சித்தனிந்த நாட்டில். மனத்தினிலேநின் றிதனையெழுதுகின்றாள், மனோன்மணியென் மாசற்ற வையத்தேவி; தினத்தினிலே புதிதாகப்பூத்து நிற்கும் செய்யமணித் தாமரை......... வண்டினைப் போலெனையு முருமாற்றிவிட்டார்." நம் சாதி தர்மங்களை வெவ்வேறு உருவுகளில் அமைத்து "ஏழ்கடல் வைப்பினுந்தன் மணம் வீசி யிசைகொண்டு" வாழும் தமிழ் நடையில் அற்புதச் செல்வங்களாக நமக்குத் தந்திருக்கிறார். தற்காலத் தமிழர்களுக்கு கம்பன், திருவள்ளுவர் இருவருக்கும் அடுத்தபடியாக நற்பயனளிக்கத் தக்க கவி சுப்பிரமணிய பாரதி யொருவரே.

" ஓராயிர வருட
மோய்ந்து கிடந்த பின்னர்
வாராது போலவந்த
மாமணியைத் தோற்போமோ ? "

தமிழர்களே! "எண்ணமெலா நெய்யாக, எம்முயிரினுள் வளர்ந்த வண்ண விளக்கிஃது" என்று பாரதியின் கவிதையைப் போற்றுவோமாக!

கல்வி

இந்தியாவின் மக்களும் அறிஞர்களும் தம் நாட்டை நவீன உலகமைப்பிற்கு முற்றிலும் ஒத்துப் புதிதாக்க விரும்புகிருர்கள். ஜனநாயக தத்துவத்தின் மகிமையும் உழைப்பும் தொழில் சமத்துவமும் ஒருங்கே சேர்ந்த ஒரு புதிய ஜாதியக் கொள்கை நம் நாட்டில் எங்கும் பரவி விசேஷ மானிட நற்பயன் களை உண்டாக்கும் என்று சொன்னேன். எல்லாரும் இந் நாட்டு மன்னர் என்ற கவியின் வசனம்,உழைப்பு என்ற அரசன் ஒவ்வொருவரையும் தன் ராஜ சின்ன மாகிய வாளினுல் தட்டி அவருக்கு நைட் (Knight) பட்டம் அளிப்பது என்பதால் உருவாகும் என்றும் கூறினேன்.

(Dost thou (India) listen to the sap
Running up trees, Democracy's one dower,
Each individual tree a man ? with cap
of commoner's liberty, each wins a power,
Mettle of dray-horse, spirit-changed, sword-tap
Of plain King Labour knighting each his hour

அதை இன்றும் நினைவு மூட்டிக்கொண்டு, பின் வரும் சீன தேசத்தினரின் வசனம் ஒன்றையும் எடுத் துக்காட்ட விரும்புகிறேன்.

"The affairs of the world, well understood, are all scholarship: Human relationships, maturely known, are already literature."

உலக நிகழ்ச்சிகள், நன்கு அறியப்படும் பொழுது எல்லாம் வித்தையே ஆகும். மனித உறவாட்டங்கள், பக்குவமாய் அறியப்படும்போது, அப்பக்குவத்தி லேயே இலக்கியமாய்விட்டன. அதாவது வாழ்க்கைக்கு உயிரும் அழகும் வாழ்க்கையே உண்டாக்கும் வித்தை என்று புலப்படுகிறதே. மனிதரின் கலாசாலைகள் எல்லாம் இவ்வாழ்க்கையையே உண்டாக்கும் கல்வியை இளமையில் நமக்கு முதலாக ஒருவாறு கற்பிக்கின்றன. அத்துடன் தேச வாழ்க்கைக்கு உரிய வித்தையும் பரிணமம் அடைகிறது.

வாழ்க்கைக்கு முக்கிய அம்சங்களாக வரையறுக்கப்பட்ட பின்வரும் ஐந்து விஷயங்களைகவனிப்போம். ஜனவரி 17-ம் தேதி இந்தியப் பிரமுகர்களாகிய எட்டுப் பேர்கள் தாகூர் தாஸ், டாடா, பிர்லா, தலால் ஸ்ரீராம், கஸ்தூரிபாய் லால் பாய், ஷ்ராப்பு. ஜான்மதாய் என்பவர்கள் பம்பாயிலிருந்து வெளியிட்ட அறிக்கையில் காணப்படுவது யாதெனில், "மூன்று ஐந்து வருஷ திட்டங்கள்" வேண்டும், அவற்றின் பயனாக இந்தியாவின் வருமானம் மூன்று மடங்கு அதிகரிக்கும். ஜனத்தொகையும் அதிகரிப்பதை நோக்கி ஒவ்வொருவருக்கும இரண்டு மடங்காவது வருமானம் உயரும். உணவு, உடை, வீடு, கல்வி, வைத்தியம், என்று அடிப்படையான ஐந்து வாழ்க்கை அம்சங்களுக்கு இன்றியமையாத ஏற்பாடுகள் நிறுவவேண்டும். விவசாயம் என்பதே முக்கால் பங்கு நடப்பதற்குப் பதிலாக, விவசாயம் நூற்றில் நாற்பதும், கைத்தொழில்கள், இயந்திரச்சாலைத்

தொழில்கள் இரண்டு வகைகளும் சமிருத்தியாய் உண்டாக்கப்படுமாம்: நூற்றிற்கு முப்பதும், உத்தியோகங்கள் நூற்றிற்கு இருபதும், ஜனங்களின் வருமானத்திற்குக் காரணமாயிருக்கவேண்டும். இதற்கு மொத்த செலவு, 15 வருஷத்தில் 10,000 கோடி ரூபாய்கள் ஆகும். இதற்கு அடிப்படையாக பொதுமக்களும் அரசாங்கமும் ஒன்றுடொன்று ஈடுபட்டு உழைத்தலாகும். அதற்கு ஜன நாயக உருவான ஜாதிய அரசாங்கம் நிறுவவேண்டும் என்பதே. எவ்வளவு சுருக்கமாகச் சொல்லிவிட்டார்கள். உணவு, உடை, வீடு, வைத்தியம் எல்லா மக்களுக்கும் நிரம்பவும் இருக்கவேண்டும். அவற்றிற்கு ஆதாரமாயும். கருவியாயும் துணையாயும் கல்வி அமைக்கப்படவேண்டும். எது முந்தி, எது பிந்தி, என்று சொல்லமுடியாது. ஆனால், பொருளாதார நிலைமையை அரசாங்கத்திற்கு முற்றிலும் அடங்காத முதலாளிகளின் முயற்சியால் மாற்ற முடியுமென்ற எண்ணம் இவர்களின் சூழ்ச்சியிலிருக்கிறது. ஒவ்வொரு ஆண், பெண், குழந்தை பொருளாதாரத்திற்கு மற்ற எல்லோருக்கும் சரி நிகர் சமானமான பொறுப்பாளி என்பதை இவர்கள் எப்படி நினைப்பார்கள்? பொதுவாக இங்கிலாந்து அல்லது அமெரிக்காவிலிருந்து முதலாளிகள் எப்படி வளர்ச்சியடைந்து தேசத்திற்கும் ஒரு பங்கு அவ்வளர்ச்சியை ஊட்டி வந்தார்களோ, அப்படியே இந்திய முதலாளிகளும், போஷகர்களாக இந்தியாவில் வாழ வேண்டுமென்பதுதான் இப் பிரமுகர்களின் எண்ணம். இதை இந்த யுத்தச் சந்தடியில் ஊர்ஜிதப்படுத்துவதற்கு

அவர்கள் முயன்று வருகிறார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. சீமையிலாவது ஒரு கட்சியினர், உதார மனப்பாங்குள்ளவர்கள். " Beveridge Plan " என்ற சர்வஜனப் பொருளாதார உரிமைச் சாஸனத்தை அங்கீகரித்து வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால் அங்கேயும் அரசாங்கத்தில் ஆதிக்கம் பெற்று இருக்கும் கன்ஸர்வடிவ் கட்சியார்—இந்தியாவைக் கப்பம் கட்டும் காலனி அரசாகப்பாவிக்கும் கட்சி—அந்தப் பெவிருட்ஜ் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஸோஷலிஸ்டு ராஜாங்கம் ஏற்பட வசதியே இல்லாமலிருக்கும் நாடுகளில் சர்வஜன சுகத்தைப் பேணித் தேடிக்கொடுப்பதற்காக பணக்காரர்களுக்கு சண்டை நடுவில் எவ்வளவு வரிகள்போடுகிறார்களோ சமாதான காலத்தில் அவ்வளவு வரித்திட்டத்தையும் போடுவதற்கு அரசாங்கம் தலையிடும் என்பது ஒரு நாளுமில்லை என்பது பணக்காரர்களை அடக்கித் தேச முன்னேற்றத்திற்கு உழைத்துத் தங்கள் லாபத்தில் மிகையான பாகத்தைக் கொடுப்பதற்கும் உடன்படும்படி செய்யக்கூடிய அரசு பாஸிஸ்டு அரசு என்பது பிரசித்தம். ஆனால் பாஸிஸ்டு கொள்கையே மனித வர்க்கத்திற்கு ஒரு கொடிய நோய்போல் தோன்றி விட்டதே. அதை ஒழிக்கவே, நிதானக் கொள்கைகளுள்ள அமெரிக்கர், ஆங்கிலேயர் என்ற இரு ஜாதியார்களும், ஸோஷலிஸ்டு கொள்கைகளை ஒரு சிறிதிலோ, முற்றிலுமோ கையாண்டு வரும் சீன ஜாதியாரும், ருஷ்யரும் இன்னும் அவர்களுக்குப் பின்பாட்டுப் பாடும் ஜாதியார்களும் இப்பொழுது லாப

நஷ்டத்தைச் சிறிதும் பாராமல் போர் புரிந்து வரு கிறார்களே. ஆகையால் பாஸிஸ்டு கொள்கை செத் துப்போகும், முதலாளி ராஜ்யம் பலக்கும், பொது மக்கள் எளியவர்களாய்த்தானிருப்பார்களென்று நிர்ணயம் செய்கிறவர்களும் அநேகர் உண்டு.

இந் நிலையில், எளிய இந்திய மக்கள் என்ன செய்யக்கூடும்? இந் நேரம் இந்திய சர்க்கார் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? மாகாணங்களிலிருந் தும் தாங்களாகவும், திட்டங்கள் தயாரித்துக்கொண் டிருக்கிறார்கள். எதற்கு? ராணுவத்திலிருந்து சண் டைக்குப் பிறகு திரும்பி வரும் சிப்பாய்களுக்கு நில வசதிகள், வேலை வசதிகள், கல்வி முறைகள், கால் வாய்கள், ரஸ்தாக்கள், மின்ஸாரம் உண்டாக்குதல் முதலிய உத்தேசங்களுக்காக ஏதோ ஆங்கில சர்க் கார் பொறுக்கி எடுத்த பிரமுகர்கள் ஆழ்ந்தயோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். முதலில் ரஸ்தாக்களில் 400 கோடி செலவழிக்கிறோம் என்கிறார்கள். 400 கோடியைக் கைத்தொழில்களில் செலவழித்தால் இந்தியாவுக்கு 400 கோடி வருமானம் கிடைக்குமே. ரோட்டுக்கு என்ன அவசரம்? அமெரிக்காவில் 20 வருஷங்களுக்கு முன் அநேக ரோடுகள் நன்றாகவே இல்லையாம், என்று விஸ்வேஸ்வரய்யா சொல்லு கிறார். இதற்கும் இந்திய மக்கள் செல்லவேண்டிய முன்னேற்ற ராஜ வீதிக்கும் எவ்வளவு தூரம்? ருஷ்யரும் சீனரும் கையாளும் திட்டங்களை நாம் காப்பியடிக்கவேண்டும். ஆங்கிலேயர் இங்கிலாந்தில் 70 வருஷங்களுக்குமுன் செய்த பொதுஜன நன்மை

களைக் காப்பியடிப்பது உதவாது. உதாரணமாக, இந்தியாவில் இன்றுவரையில் நடந்துவரும் ஆரம்பக் கல்வி ஏற்பாடுகள், இங்கிலாந்தில் நூறு வருஷங்களுக்குமுன் நடந்த இயக்கத்தை ஒத்து இருக்கின்றனவே யொழிய வேறில்லை. பேர்பெற்ற சார்ஜெண்டு திட்டம்கூட தீவிர நடையில் ஆக்கப்படவில்லை. 70 வருஷத்தில் இந்தியாவில் 270 கோடி ரூபாய்கள் வருஷந்தோறும் செலவழித்து இந்தியர்கள் எல்லோரையும் படிப்பாளியாய் ஆக்கலாம் என்று ஜான் ஸார்ஜெண்டு அவர்கள் பிரேரேபிக்கிறார். கனம் வேவல் துரை அதற்குப் பணமே கிடைக்காது என்று முடிவு கட்டிவிட்டார். சூழ்ச்சிக்கு முடிவு துணிவெய்தல். அவர் துணிவு அத்துணையது.

உண்மை என்னவென்றால், இந்தியாவிலுள்ள மக்கள் எல்லோரும் சேர்ந்து உழைத்தால்தான் இந்தியாவில் புராதனமாகவோ, சென்ற 150 வருஷங்களாகவோ வளர்ந்து வந்த பொருளாதாரத் தாழ்வை மாற்றமுடியும். ஜர்மானியர், ருஷ்யாவில் செய்திருக்கும் நாசங்களைச் செப்பனிடுவதற்கு ஒரு கோடி தேர்ந்த தொழிலாளிகள் 10 வருஷம் இடைவிடாமல் உழைக்கவேண்டுமென்றும், அப்படியும் ஜர்மன் ஜாதியாரிடமிருந்து பணம், சாமான்கள், மாடு, குதிரைகள், கோழிகள் முதலியவை இயந்திரங்கள், இன்னும் மற்ற சாமான்கள் ருஷ்யருக்குப் பிடுங்கிக் கொடுத்தாக வேண்டுமென்றும் யூஜின்வர்க்கா என்ற ருஷ்யப் பொருளாதார சாஸ்திரக்ஞர் எழுதுகிறார்.

இந்தியாவுக்கு யாரிடமிருந்து இவற்றைப் பிடுங்கிக் கொடுப்பது? யார் அதற்குப் போர் செய்வது? இப்பொழுது நமக்கு நம் தேசத்திலேயே பாக்கி இருக்கும் எல்லாப் பொருள்களையும், சாதனங்களையும் நாம் சேமித்துத் திரட்டி நமக்காகவே உபயோகித்தால் போதும். அதற்கும் சுயராஜ்யம் வேண்டும். ஆகையால், இந்திய சுதந்திரம் நமக்குக் கைகூடாதவரையில் விசேஷ முன்னேற்றத்தை எதிர்பார்க்கமுடியாது.

மேலும், இந்த ஆலோசனைகளெல்லாம் வெற்றியடைய வேண்டுமானால், இந்தியா முழுவதும் ஒன்றுபட்ட பொருளாதார சாஸனத்திலடங்கவேண்டும். ஆனால், அரசியல் சாஸனம் இந்தியாவைப் பிளவுபட்ட ஜாதியங்களாக அமைக்கலாம். அத்துடன் ஓர் மத்திய அகில இந்திய அரசாங்கம் சர்வாதிகாரத்துடன் இயற்றப்பட்டாகவேண்டும். இவ்விதமாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட அமைப்புக்களைப் பிரேரேபித்திருக்கிறார்கள். இந்தியாவின் பணக்காரர்களும் பொருளாதார நிபுணர்களும் தற்போதிருக்கும் அகில இந்தியாவின் கல்வி அதிகாரிகளும் முக்கியமாக சார்ஜெண்டுதிட்டத்தைப் பரிசிலனை செய்துவருவதாகத் தோன்றுகிறது. சார்ஜெண்டு சமீபத்தில் (Science) சயன்ஸ் காங்கிரஸில் பின்வருமாறு தன் திட்டத்தை விளக்கிக் காட்டினார். தேச முழுவதும் எல்லோருக்கும் கட்டாய இலவசக் கல்வி 5 வயதிலிருந்து 14 வயது முடிய, ஆண்களுக்கும் பெண்களுக்கும், ஊர்ஜிதமாக நன்றாய் எழுதல், படித்தல், நாகரிகப் பொறுப்பு ஏற்றல் எனபவை உத்தேசங்கள். 5 வயதுக்குமுன் சிறு

குழந்தைகளுக்கு என்று பள்ளிக்கூடங்கள், கூடியமட்டும் சுமாரளவில், சுகாதாரம் பிடிபடுவதற்காக தகுந்த வயதில் 100க்கு இருபது பேர்களுக்கு வெவ்வேறு விதமான ஹைஸ்கூல்கள் நிறுவுதல். எல்லோருக்கும் ஒரே மாதிரியான கல்வியல்ல. தொழில்களிற் புகுத்தும் கல்வியும் High-School களில் உண்டு. நிரம்ப உபகாரச்சம்பளங்கள் வகையரு ஏழைகளுக்கு, நல்ல High School படிப்பில் தேர்ந்தவர்களுள், 15 பேர்களில் ஒரு நபர் காலேஜ் படிப்பு, தேசத்திலுள்ள கைத்தொழில்களுக்குத் தேவையான அளவில் உத்தியோகப் பயிற்சி, தொழில் படிப்பு அளிக்கவும், இயந்திர வேலை, வியாபார நடவடிக்கை, சிற்பம் என்பவற்றில் பயிற்சி அளிக்கவும், குறைந்த படிப்புள்ள வயது முதிர்ந்தவர்களுக்கு வசதியான கல்விச் சாதனங்களும் ஸ்தாபனங்களும் வேண்டும். இவற்றிற்கு வேண்டிய ஏராளமான உபாத்தியாயர் சேனையைத் தயாரித்தல், ஸ்கூல் வைத்தியம், பள்ளிப் பிள்ளைகளுக்கு உணவளித்தல், நல்ல கட்டிடம், நாற்காலி முதலிய வசதிகள் பள்ளிக்கூடங்களுக்கென்று நல்ல நிலங்கள், இடங்கள் பொறுக்கி எடுத்துக்கொள்ளுதல், தேகப் பயிற்சி, வேடிக்கை, விநோதங்கள், போட்டி விளையாட்டுகள் அநேக மடங்கு அதிகரித்தல். குருடு, மூடம், செவிடுகளுக்குத் தனிப்பட்ட பள்ளிக்கூடங்கள், பார்வைக்கு அசடுகளுக்குக் கூடப் பள்ளிக்கூடங்கள். நாகரிகத்தில் வீடு சிறப்பாயில்லாததால் பள்ளிக்கூடமானது கூடிக்களிப்பதற்கு நல்ல இடமாகும்படி வசதிகளைச் சேகரித்தல், கிளப்புகளைப்போல்

ஆக்குதல், பள்ளிக்கூடம் விடுகிறவர்களுக்கு வேலை சம்பாதித்துக்கொடுக்கப் புத்திமதியளிக்க ஆபீஸ்கள், வெளியிலிருக்கும் வேலைக்கும் பள்ளிக்கூடத்திலிருந்து உற்பத்தியாகும் சரக்குக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்தல். பள்ளிக்கூடத்திலிருந்து அதற்குப் பொருத்தமாக பாஸ் செய்துவிடுதல். கல்வித்துறையில் புத்திசாலித்தனம், சூழ்ச்சி, சாமர்த்தியம், உண்மை, மரியாதை, அதிகாரம்பெறச் சக்தியுள்ள அதிகாரிகளையே உண்டாக்கும் அரசாங்க ஸ்தாபன ஸம்பிரதாயம் வேண்டும். முட்டாளைக்கொண்டு கல்வித் துறையில்மட்டும் நிர்வாகம் நடத்தச் செய்தல் தவறு. இவற்றை எல்லாம் நம் தேசம் ஒரு ஐம்பது வருஷங்களுக்குள் பெற்றுவிடவேண்டும் என்று ஸார்ஜெண்டு துரை கூறுகிறார். பிரிட்டிஷ் இந்தியாவுக்கு மட்டும் வேலைக்காரர்கள் சம்பளத்திட்டம் 195. 75 கோடி ரூபாய் வேண்டும். மற்ற தேவைகளுக்காயுள்ள செலவையும்சேர்த்தால், 313 கோடியாகும். பிரிட்டிஷ் இந்தியாவுக்குமட்டும் பையன்கள் சம்பள வருவாய் 35·5 கோடி என்று கணக்கிட்டு மிச்சம் ஸர்க்கார்ச் சிலவு 277·5 கோடி என்று ஸார்ஜெண்டு துரை கணக்கு விகிதமும் சொல்லுகிறார். இதற்கு எதிர்ப்படையாக இந்திய ஸர்க்கார் கமிட்டி 20 வருஷத்தில் 61 கோடி ரூபாய் செலவடங்கிய ஒரு கல்வித்திட்டம் வகுத்திருக்கிறார்கள் என்று இன்றைய செய்தி தெரிவிக்கிறது. ராணுவச் செலவிலிருந்து மிச்சப்படுத்தியும், மத ஸ்தாபனங்களிலிருந்து பணம் பிரித்தும், இன்னம் மற்ற விதங்களிலும் இந்த

தொகை சேகரிக்கலாம் என்று அவர் முடிவுகட்டு கிருர்.

இதற்கு35 அல்லது 40வருடங்களாகும். இந்த ஸ்தாபனங்களை ஊர்ச்சிதம் ஆக்க 8–5 வருஷத்திட்டங்கள். பொருளாதார நிபுணர்கள் தங்கள் நோக்கங்களுக்கு 3–5 வருஷத்திட்டங்கள் வேண்டுமென்ருர்கள். முதல் ஐந்து வருஷத்தில் ஸ்தாபனங்கள், உத்தியோகஸ்தர்கள், உபாத்தியாயர்கள் சிருஷ்டிக்கப்படும், பிறகு ஒவ்வொரு 5 வருஷமும், ஒவ்வொரு மாகாணத்தின் 7ல் ஒரு பாகத்தில் இப்பூர்த்தியான கல்வியை உண்டாக்கிப் பயிரிடுவோம். உடனே கதிர் விடும். கடைசி 10 வருஷங்களில்தான் பூராவாகிய 277.5 கோடிச் செலவு அவசியமாகும். இடையில் 30வருஷங்களுக்குள் இந்தியாவின் தீவிரக் கைத்தொழில் அபிவிருத்தியால் ஜனங்களின் செல்வமும், செலவழிக்கும் திறனும் உயர்ந்து இந்தியக் கல்விச் சாதனங்களுக்குரிய செலவை வெகு சாதாரணமாய் நாம் நடத்திக் கொள்ளக்கூடும். இப்படிப்பினுலும் மற்ற சந்தர்ப்பங்களினுலும் நாகரிகவாழ்விலும் நாகரிகச்செலவிலும் மக்கள் ஒவ்வொருவரும் 100க்கு 100 உயர்வு அடைவார்களென்று திண்ணமாக அநேகர் சொல்லுகிருர்கள். அப்படியானுல் நாம் தாராளமாகக் கல்விக்காக கடன்வாங்கிச் செலவு செய்யலாம். பெரியலோன்கள் எடுக்கலாம். தான் சொல்லுகிற திட்டத்தை உடனே அமுலுக்கு கொண்டுவரலாம் என்று ஸார்ஜெண்டு சொல்லுகிருர். இது உலகத்திற்கே ஓர் பெரும் நன்மையாகும். இதைச் சீக்கிரம் முடித்தால், இது செய்தாகவே வேண்டும். யுத்தத்தில் உலகை காப்ப

தற்கு ஏராளமாகப் பணம் கிடைக்குமானுல் அதை விட ஜகதோத்தாரகமான வேலையாகிற இந்திய கல்விக்கு சமாதான காலத்தில் ஏன் பணம் கிடைக்காது? இதில் அரைகுறை வேலை உதவாது. இந்தியா எளிமையான தேசம் என்று சும்மா இருத்தலே சிவம் என்கிருர்களே. மற்ற தேசங்களைவிட நிரந்தரமாக, யுகம் முடிகிற வரையில இந்தப் பெருஞ் செல்வத்தில் பஞ்சையாக இந்திய மாதா இருக்கவேண்டுமா? என்று ஆர்வமுடன் இந்த அன்னிய தேசத்து நிபுணர் கேட்கிருர். இதற்கு பதில் இந்திய மக்களே அளிக்க வேண்டும். இந்தியாவில் தனி மனிதனின் நாகரிக வாழ்வின் உயர்வு, வாழ்க்கையின் ரீதி, அளவு, வருமான அளவு, நாகரீகச் சிலவு, உணவு, உடை, இருப்பு, கல்வி, வைத்தியம் இவற்றின் நிறைவு, இவற்றின் வளர்ச்சியைப் பேணிக்காரியங்கள் தொடங்க வேண்டும் என்று எல்லா நிபுணர்களும் தேசாபிமானிகளும் கூறுகிருர்கள். இதுதான் நம் இயக்கங்களின் குறி. இது சித்தி பெருவிட்டால் சுதந்திரம்கூட மட்டம்தான். இந்தியா நிரந்தரமாகத் தாழ்ந்த நாடாக இருக்கவா? இப்பொழுது இந்தியத் தொழிலாளிகள் மற்ற எளிய இந்தியர்களைவிட ஒரு சிறிது நாகரிகப்பான்மையிலும், செல்வச் செலவுகளிலும் (Standard of Living) உயர்வு பெற்றிருக்கிருர்கள். விவசாயிகளுக்கும் அந்த உயர்ச்சி கிடைக்கவேண்டும். எந்த தேசத்திலுமே விவசாயிக்கும் தொழிலாளிக்குமுள்ள நாகரிகச் செல்வ வித்தியாசம் முக்கிய பிரச்னையாயிருக்கிறது. ஆகையால்தான் அமெரிக்காவில்கூட விவசாயிகளின் வோட்டுக்களை பிடிப்பதற்

காக எல்லா கட்சியினரும் பாடுபடுகின்றனர். அவர் களை ஆதரித்துத் தொழிலாளிகளின் வல்லமை பொருந்திய சங்கங்களை மட்டப்படுத்தவும் முயலுகின் றனர். இப்போட்டி இந்தியாவிலும் தலை காட்டி யிருக்கிறது. நவீன நாகரிகத்தில் விவசாயமும் இயந்திரக் கருவிகளால் பெரும்பாலும் நடைபெற்று பெரிய "Mill" தொழில்களுடன் போட்டிபோடுகி றது. வியாபாரமோ கேட்கவேண்டாம். தொன்று தொட்டு வந்த விதி யென்னவென்றால், வியாபாரியி னிடத்தில் செல்வம் பொங்கி வளருவதும், அடியோடு திடீரென்று மடிவதும் சகஜமாயிருக்கிறது. வருங் கால இந்தியாவில் விவசாயமும் கைத்தொழிலும் அதிகத் தீவிரமாகப் பெருக்கப்படலாம். ஆனால், எளிதே. சங்கங்களுடன் வியாபாரம் செய்கிற போட்டியில் ஜெயிக்கவேண்டுமானால் இந்தியாவின் யுத்த பலன் நிரந்தரமாக அதிகரித்திருக்கவேண்டும். பலத்த ஜாதியாரின் வியாபாரம்தான் இதுவரையில் ஓங்கிவந்தது. இதை எல்லாம் இந்த யுத்தத்திற்குப் பிறகு முற்றிலும் மாற்றி உலகத்திலே (economic-unity) பொருளாதார ஏக பத்தியம், ஐக்யபத்தியம், ஐக்கியமனசு உண்டாக்கப் போகிறோமென்று இப் போது ஜயம் பெற்றுவரும் நம் ஐக்கிய தேசங்களின் தலைவர்கள் கூறுகிறார்கள். நடக்குமா என்பது கேள்வி. ஆகையால் இந்தியா ஸோஷலிஸ்டு திட்டத் தைக் கையாண்டு ருஷ்யாமாதிரி பொருளாதார விதி களைக் கையாண்டு வந்தாலொழிய இந்தியாவிற்கு பொருள் செழிப்பு ஒன்றும் பயன்படாது. சீனாவுக் கும் அப்படியே.

ஆனால், நாகரிக வாழ்வின் வெள்ளத்தின் அளவு சமூக நிர்மாணம் என்ற இஞ்ஜினீயரிங் சாஸ்திரத் தால் நிர்ணயிக்கப்படவேண்டும். 'ஸோஷல் டெமாக் கரஸி' என்பது முடியாத வஸ்து என்று நம்முடைய கம்யூனிஸ்டு (Communist) கட்சியினர் சொல்லு கிறார்கள். சர்வாதிகாரம் பெற்ற தொழிலாளர் அரசு தான் கறிக்கு உதவும் என்கிறார்கள். இந்த பிரச்னை இந்தியாவில் இப்பொழுது தீர்மானத்துக்கு வர வேண்டும். உலகத்தில் தோன்றியிருக்கும் லௌகிக தர்மங்களின் பரிசிலனை முழுவதும் நம்மால் நடத்தி யாகவேண்டியிருக்கிறது. நம் அறிஞருக்கு என்ன வேலை? நம் நாட்டின் உழைப்பாளிகளுக்கு என்ன பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது?

இந்த சந்தர்ப்பத்தில் தான் கல்வியின் பயிற்சியி லிடுபட்ட நாம், உபாத்தியாயர், கல்வி ஸ்தாபனக் காரர்கள், படித்தவர்கள், எல்லோரும் யாது செய்யக் கூடும் என்று ஆலோசிக்க வேண்டும். புதுச் சீர்திருத் தங்களை வரவேற்றுக் கிரமமாக நாம் செய்து வரும் வேலை யைப் பதின்மடங்கு ஊக்கத்துடன் செய்யவேண்டும். கல்வி இருவிதம். ஒவ்வொரு மனிதனின் பகுத்தறிவும் குன்றாது காத்தல், நிபுணரின் சிந்தனை உலகளாவிப் பரிபூரணம் பெறுதல். இவ்விரண்டு நோக்கங்கள் கல்வி என்ற உயிர் பெற்ற சாஸனத்திற்கு உண்டு அச் சாஸனத்தைப் பரிபாலிப்பவர்கள் உபாத்தி யாயர்கள் ஆகிய நாம். உபாத்தியாயர்கள் சம்பளங் களைப் பாதுகாத்தல், ஸார்ஜெண்டு திட்டத்தில் முக்கியமாய் விளங்குகிறது. ஆரம்ப ஆசிரியர்களுக்கு

30லிருந்து 50 ரூபாய் வரையிலும், வீடு வசதிகளுக்குக் கொஞ்சம் கூடவும். Middle school, Basic school வாத்தியாயர்களுக்கு 40—80 ரூபாய் வரையிலும், யுனிவர்ஸிடிப் பட்டம் பெற்ற வாத்தியாயர்களுக்கு 75—150 ரூபாய் வரையிலும் ஹெட் மாஸ்டர்களுக்குப் பள்ளிக்கூடத்தின் Size பிரகாரம் போதுமான கண்ணியத்தை யளிக்கும் சம்பளங்களும்-500 ரூபாய் கூடக்கிடைக்கலாம்—இப்பொழுது Christian College School தலைமை உபாத்தியாயருக்கு அதற்கு மேல் சம்பளம். ஸார்ஜெண்டுதிட்டத்தில் போட்டிருக்கிறது. இதை நாங்கள் மனப் பூர்ணமாய் வரவேற்கிறோம். எங்களுடைய "Standard of-living" மட்டமாயிருந்தால் உங்களுக்கு என்னவாகும்? விசாகபட்டணத்தில் சமீபத்தில் ஜப்பானியரின் பாம் விழுந்த இடத்தில் அமெரிக்க சிப்பாய்களின் கிளப்புகளுக்கு ஆங்கில சிப்பாய்கள் போகக்கூடாதென்றும் இந்திய சிப்பாய்கள் இருவரின் கிளப்புகளின் கிட்டேயே போகக்கூடாதென்றும் கட்டுப்பாடு இருக்கிறதாம். ஏன்? அமெரிக்க சிப்பாய்க்கு ரூபாய் 300க்கு மேல் சம்பளம், இங்கிலீஷ் சிப்பாய்க்கு ரூபாய் 100க்கு மேல் சம்பளம், இந்திய சிப்பாய்க்கு ரூ 20சம்பளம், என்பதுதான். ஒரு குண்டு விழுந்தால் அதன் சில்லுகள் பட்டு 3 இனத்தினரும் ஒரு கணப் பொழுதில் சாகவேண்டியிருக்கிறதே. ஆனால் Standard of Living என்பது நாகரிகத்துக்குப் பொருந்தும் வருமானமும், செலவும் எவ்வளவு வித்தியாசத்தை உண்டுபண்ணுகிறது. ஒரு பள்ளிக்கூடத்தில் நடக்கும் பயிற்சிகள் எல்லாம் நன்கு நிறை

வேறவேண்டுமானால், உபாத்தியாயரின் கண்ணியம் உயர்ந்து வந்தாலொழியப் பயனொன்றுமில்லை. அவ்வுபாத்தியாயர்களும் கண்ணியத்திற்குப் பாத்திரர்களாயிருக்கவேண்டும். மேலும் புதிய இந்தியாவிற்கு அவர்களே சிறந்த ஆலோசனைகளையும் விஞ்ஞான வளர்ச்சியையும் அளிக்கவேண்டும். உபாத்தியாயர் நோய் வாயிலகப்பட்டு வதை படும்பொழுதும் படித்துக்கொண்டே இருக்கவேண்டும். படிப்பில்லாத உபாத்தியாயர்கள், நொண்டி, முடம்போன்ற தொழிலாளிகளாக முயலுவதுபோல் தான், கண்ணில்லாதவன் சித்திரக்கலைப் பயில்வதுபோல்தான்.

இச் சந்தர்ப்பத்தில் படிப்புவகை அல்லது பகுளமான தேசக் கல்வி என்பதற்கும் தேசத்தின் விசேஷக் கல்விக்கும் மேதாவிகளின் படிப்புவகை என்பதற்கும் உள்ள முரண்பாட்டை கவனிப்பது மிக்க உசிதமாயிருக்கிறது. நவீன வாழ்க்கை ஸ்தாபனங்களும், ஜாதிய தருமங்களும், நாட்டின் இன்பங்களும், செல்வங்களும், வளருவதற்கு அடிப்படையானது பாங்கான பொதுமக்கள் கல்வியே. நாட்டிலுள்ளவர் எல்லோரும் எழுதப்படிக்கப் பழகுவதுடன், ஒரு மடங்கு போதிய சாஸ்திரப் பயிற்சியும், தொழிற் பயிற்சியும், கலைகளில் அறிவும், பெற்றிருக்கவேண்டும் என்று ஒவ்வொரு சுதந்திர வாழ்க்கை பெற்ற தேச அரசாங்கமும் அரும்பாடுபடும் காலமிது. இந்த யுகமானது சாதாரண மக்கள் கல்விப் பெருக்கையும் உரிமைச் சுதந்திரங்களின் பெருக்கையும் ஆர்வத்துடன் விரும்பிக் கைப்பற்றும் யுகமல்லவா? சாதா

ரண மக்களின் வாழ்வு பல்வித மாளிகைகளில் அமர்ந்து, பல்வித ஞானப் பலகணிகளால் ஜீவராசிகளின் போக்கு முழுவதையும் சுவீகரிக்கும் வாஞ்சையுள்ளதாய் இருக்கிறது. மக்கள் எல்லோரும் சிந்தனையினாலேயே ஒரு முழம் உயரும் காலமிது. அவர் தன் மதிப்பு வளர்ச்சி அத்துணையாகியது. ஆகையால் இப்பொழுதே என்ன வேண்டுகிறார்கள்?

"வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளனவூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி
தேடு கல்வியிலாததொ ரூரைத்
தீயினுக்கிறையாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியை கண்டீர்"......என்று

நம் நாட்டு இன்பக் கவி பாரதியாரும் பாடியிருக்கிறார்.

ஆனால் இத்தகைய பொதுப் படிப்பு நிகழும் போது. கல்வி என்பது விசாலமாகிறது. அதாவது பலபேர்களுக்கு எடுத்து விடும் பால் முதலியவை போலிருக்கிறது. அதன் சிறப்பு, இனிப்பு சகஜமாய்க் குன்றிவிடுகிறது. சாதாரண மக்களுக்குள் வேற்றுமையின்றிக் கல்வி பரவுகிறது. ஒரு மடங்கு போதிய சாஸ்திர ஞானமும், தொழிற்றிறமையும், கலையின்பமும் எல்லோருக்கும் கிட்டுகிறது என்று வைத்துக் கொள்வோம். ஐரோப்பியர்களுக்குள் ஜர்மானியர்களும், அக்கொடிய ஜாதியார்கள் வஞ்சித்துகொன்றுவிட்ட செக்கோஸ்லொவ்கியா தேசத்தினருக்கும், இத்தகைய சாதாரணக் கல்வி நன்கு பலித்திருந்தது

என்று நாம் கேட்டிருக்கிறோம். இருந்தாலும், அறிவுத் தோட்டத்தில் சாதாரணமான செடிகளும், கனி மரங்களும் திரள் திரளாய் வைத்து உண்டாக்குவதில் என்ன நேரிடுகிறது என்றால், விசேஷ நறுமணம் பூண்ட செடிகளுக்குப் போதிய, நுட்பமான கவனிப் புக் கிடைப்பதில்லை. ஒரே இடத்தில் இரண்டு வகைப் பிறவிகளை வளர்ப்பது பயனற்றதாகிறது. அதாவது சாமான்யக் கல்வி புகட்டுவது என்ற இயக்கம் விசேஷக் கல்வியை அடித்து விடுகிறது. சாமான்யக் கல்விப் பள்ளிக்கூடங்களில் விசேஷக் கல்வி யுண்டா காது.—இது ஒரு கட்சி.

கல்விமுறைகளில் என்ன விதிகள் நாம் செய் வோம்? நல்ல படிப்பு, விசேஷக் கல்வி வரக்கூடிய வனுக்கு எவ்வளவு வெகு தாராளமாக கல்வி வசதி களைக் கொடுக்க முடியுமோ அவற்றைக் கொடுத்து விட்டு-மற்றவர் களுக்கு எல்லாம், மனித வேற்றுமை யின்றி, வகுப்பு வேற்றுமையின்றி, தேசத்தின் வரு மானம், பொருட் பலம் எவ்வளவோ, அவ்வளவுக்கு வெகு நல்ல கல்வியும் கல்விப் பயனாகிய நாகரிக சக்தி களைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவும், சீரான ஏற்பாடுகளைச் செய்து முடிப்போம். அப்பொழுது, மனிதர் ஒவ்வொரு வரும் ஒரு சிற்ப சிருஷ்டியைச் செய்வார். உயிருடன் விளங்கும் மனிதன் என்ற சிருஷ்டியைச் செய்வார். அது ஓர் பரம சிருஷ்டியா கும். ஒரு தனி மனிதனின் வாழ்க்கையின் கடைசி யான பக்குவம் நமக்கெட்டினவரையில் அதுதான்.

இது நிற்க, ஸார்ஜெண்டு திட்டத்தை அமுலுக்கு கொண்டுவருவதற்குமுன் மற்ற குறுக்கு வழிகளில் இந்திய மக்களின் படிப்பை விருத்தி செய்யச் சாதனங்களுண்டு. ஒவ்வொரு பழைய தேசத்திலும் அவ்வித இயக்கங்கள் நடைபெற்றுவருகின்றன. எண்ணும் எழுத்தும்மட்டிலும் எல்லா குழந்தைகளுக்கும் மூன்று அல்லது நான்கு வருஷங்களில் கற்றுக் கொடுத்து விடலாம். பிறகு நேரிடையாக வாழ்க்கையின் அம்சங்களைப் பயிலும்படி அவர்களுக்கு வழி காட்டலாம். தெருத்தெருவாயும் ஊரூராயும் சுற்றும் வண்டிச் சினிமாக்களும், துண்டுப் பிரசுரங்களும், புத்தகங்களும், பிரசங்கங்களும், சின்னச் சின்ன வகுப்புகள் சேர்த்துப் போதித்தலும் அமைக்கப்பெற்று, அவை வாழ்க்கை நடைமுறை விஷயங்களுக்குச் சம்பந்தமாகவேயிருத்தல் வேணடும். சுகாதாரக் கேடுகளைப் போக்குவதற்கு என்றும், நிலங்களின் வளம், உரம் முதலியவற்றின் சரி பார்வை, Soil erosion, malnutrition, infant mortality, tuberculosis என்ற சாமானியமான சீர்கேடுகளை அகற்றுவதில் நேரே பாடுபடுவதிலும் ஜனங்களின் கவனத்தைச் செலுத்தி, அவற்றிலிருந்து கல்வி போதித்தல் mass Consciousness என்ற சக்தியை வளர்த்தல் ஆகும்; அதற்கு mass education என்ற பூண்போடுதல். இவையெல்லாம் ருஷ்யா, சீனு, இப்பொழுது சில ஆப்பிரிக்கா நாடுகள்—, பழைய டச்சுக்காரர்களின் ஆசியா ராஜ்ஜியங்கள் கையாண்டுவந்த வழிகள். இதையே வார்தா திட்டம் என்ற ஓர் பெரிய சாதனம் பிரயோகப்படுத்திக் கொள்வ

தாக இருந்தது. வார்தா திட்டத்திலுண்டாகிய Basic School உண்மையான ஜனசக்திக் கல்வியை உண்டு பண்ணும்.

மேலும், படிப்பில் நல்லது கெட்டது என்ற பேதங்களைப் பார்க்காமல் சில வருஷங்களுக்குப் பள்ளிக்கூடங்களைப் பெருக்கி வந்தோமே? பணநஷ்ட-மிருந்தது. ஆனல் படிப்பின் செல்வாக்கு அதிகரித்தே வந்தது.

ஆகையால் உடனேயே படித்தவர்களாகிய நாமெல்லோரும் "Mass Education Officers" ஆகவும் "Combined operations Officers" ஆகவும் ஒரு சிறிது ஆகிவிடவேண்டும். சமீபத்தில் வந்த ஆப்பிரிக்க கல்வியறிக்கையைப் பார்க்கவும். நம் மாத்ருபூதமய்யர் அவர்களைவிட "Combined operations Officers" யாருண்டு? ஸ்ரீ மாத்ருபூதமய்யர் வாழ்க!

"ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி
யாகம் முதற்றிண் பணைபோக்கி யருந் தவத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலு மன்றே"

என்று மகா கவி கம்பர் அயோத்தி நகரைப் புகழ்ந்து பாடியிருப்பதுபோல், கல்வித்தொண்டானது எல்லா அம்சங்களிலும் பயனுள்ளதாகட்டும்.

"பெண் கல்வி"

அதிமேதையான டீ. எச். லாரென்ஸ் என்ற ஆங்கில நாவலாசிரியர் கூறியிருப்பது என்னவென்றால் "பெண்ணானவள் பத்தினி, தாய், நாயகி என்ற பாவங்களை மட்டும் கவனிப்பது சரியல்ல; மேலும், படிப்பின் மேன்மை சமூக நிகழ்ச்சிகளில் விளங்குதல், அறிஞர் உபசரணையினாலும் மனித அறிவினாலும் தலைமையும் பெருமையும் பெறுதல் என்பவை பெண்களின் லட்சியங்களாயிருப்பதும் போதாது. பெண், தர்க்க அறிவும், நியாயம் கண்டுபிடித்தலும் முக்கியமாகத் தேடவேண்டாம்; ஆனால், பெண்ணானவள் உலக சக்தியின் அம்சம், உலகசக்தியின் புரோகிதை, அவள் வாயிலாக சக்தியும் உண்மையும் ஒருங்கே பாய்கிறது உலகினுக் கெல்லாம்" என்பதாகும்.

இந்தக் கருத்து பூர்வீக இந்திய அறிஞர்களின் கருத்துக்கு ஒப்பானது. மதக்கொள்கைகளினாலும், ஆசாரக் கட்டுக்களினாலும் எப்படியோ இந்திய மாதர்கள் பாதிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் தனிப்பட்ட தெய்வத்தன்மை பூண்டவர்கள் என்பதை இந்தியர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். "மனு தர்ம சாஸ்திரம் முழுவதும் சூரிய வெளிச்சம் அடிக்கிறது. மறைத்துவைக்கிறது என்பதில்லை. பெண்களைப்பற்றி விவாகம், மக்களைப் பெறுதல் என்னும் விஷயங்களெல்லாம் தெளிவாயும், மரியாதையுடனும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பெண்ணைப்பற்றி இவ்

வளவு ரம்மியமான, அன்புத்தளிர்கள் அடங்கிய விஷயங்கள் வேறொரு கிரந்தத்திலுமில்லை'' என்று நீஷ்ஷி என்ற 19-வது நூற்றாண்டின் ஜர்மானிய தீர்க்க தரிசி கூறியிருக்கிறார். ஆகையால், இந்தியராகிய நாம் பெண் கல்வி, பெண் முன்னேற்றம் என்பதில் உலகத் தோருக்கு உண்மையைப் புகட்டும் நிலையிலிருக்கி றோம். அதுவே இந்தியாவின் பெண் முன்னேற்ற இயக்கத்தின் வலிமையாகக் கருதப்படவேண்டும்.

ஆதலால், இப்பொழுது நடக்கும் இந்திய மாதர் களின் முயற்சிகளை நாம் பாராட்டவேண்டும். அநேக மாக நேரான, வீரமான வழிகளில்தான் அவை செல் கின்றன. பெண்கள் சுதந்திரம் என்பது முதலாவது லக்ஷியமென்றால் அது இந்தியத்தாய்க்கு உகந்ததாகும். சந்தேகமில்லை. நம் தென்னிந்தியாவின் ஒரு பாகமான மலையாளத்திலும், மகாராஷ்டிர தேசத்திலும் பெண் களின் சுதந்திரம் வெகுகாலமாக நிலைநின்றிருக்கிறது என்பது நம் தேசத்திற்கே பெருமை. மேலும், காந்தி யடிகளின் தூண்டுதலினால் பெண்கள் எல்லா விதத் திலும் ஆண் மக்களைப்போல் உழைத்தும், சுகித்தும், அல்லது வைராக்கியத்தைப் பேணியும், துன்பங்களை உலகின் வெட்ட வெளியில் வந்தெதிர்த்தும், சத்தி யாக்கிரகப் போராட்டத்தின் இன்னல்களில் ஆண்க ளோடு சமபாகம் எடுத்தும் வந்திருக்கிறார்களென் பது எல்லோரும் அறிந்ததாகும்.

அதேமாதிரி, இப்பொழுது இங்கிலாந்தில் ஆயி ரக்கணக்கான மாதர்கள் முதன் முதல் தங்கள் வாழ்க் கையில் நாட்டிற்கும், எல்லாத் தேச மக்களுக்கும்

வேண்டிய அரிய தொண்டு ஒன்று இருக்கிறதென்றும், தங்கள் புருஷர்களும், சகோதரர்களும், புத்திரர்களும் பிரதானமான யுத்த வேலையில் அமர்ந்திருப்பதால் அவர்களுடைய தினசரித் தொழிலைத் தாங்கள் கற்றுக்கொண்டு நடத்துவது அவசியமாகிவிட்டது என்றும் தெரிந்துகொண்டு விட்டார்கள். டிராப்ட்ஸ்மன் வேலை, கல் வெட்டல், களம் வைத்தல், காய்கறித் தோட்டம் வைத்துநடத்தல், வீடு சுத்தம் செய்தல், பூட்ஸ் ரிப்பேர், குழந்தைப் பள்ளிக்கூடங்கள், கிளப்புகள், இஞ்சினீயரிங் உள்பட எண்ணற்ற தொழில்கள் இத்தருணத்தில் அவர்கள் பார்க்கிறார்கள்.

இது தவிர, லட்சக் கணக்கான பெண்கள் யுத்த சாமான்களை உண்டாக்கும் பண்டகசாலைகளில் ஓய்வு ஒழிவு இன்றி வேலைசெய்து வருகிறார்கள். "இப்பொழுதுதான் ஒரு முக்கியமான தொழில் ஒவ்வொரு பெண்ணுக்கும் கிடைத்திருக்கிறது. ஜனங்களுக்காக ஏதாவதொன்றைச் செய்துமுடித்தல் வெகு மேன்மையல்லவா?" என்று மந்திரி பெவின் இலாகாவிலுள்ள தொழிற்சாலையில் உள்ள பெண் தொழிலாளி ஒருவள் கூறினாள்:

ஜன சமுகமே நன்றாய்த் தேச நன்மை இயக்கங்களில் கட்டுப்பட்டுப் புதியதாகிவிட்டது என்று சொல்கிறார்கள். இதில் பெண்கள் முயற்சி அந்த ஜனக்கட்டை ஊர்ஜிதப்படுத்துகிறது என்றும் சொல்கிறார்கள். ஜர்மனியில் வழக்கமாகப் பெண்ணானவள், கோயில்......குழந்தை என்ற தெய்வந்தொழுதாலும், இந்த யுத்த சமயத்தில் லட்சக்கணக்கான பெண்கள்

தொழிலாளிகள். ஆனால், அவர்களுக்கு உரிமை என்ற பேச்சே கிடையாது.

ருஷியாவிலோ கேட்கவேண்டாம். சாதாரண மாகவே மற்ற தேசங்களைவிட மிக்க அதிகத் தொகை யுள்ள பெண்கள் வேலைகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

பெரிய யந்திரசாலைத் தொழிலில் 100க்கு 41-பேர்கள் பெண் தொழிலாளிகள்; 1¾ கோடிக்குமேல் பெண்கள் பெரிய சமஷ்டி சாகுபடி நிலங்களில் வேலை செய்கிறார்கள்; அதில் 57,000 பேர்கள் 'டிராக்டர்' கலப்பை ஓட்டுபவர்கள், இஞ்சினீர்களில் 100க்கு 16 பெண்கள். 23 வயதுக்கு உட்பட்ட தொழிலாளி களில் 100க்கு 48 பெண்களே. மேலுத்தியோகங் களிலும் ஆண்களுக்குச் சமமான அளவில் பெண்களு மிருக்கிறார்கள். வைத்தியக் கல்வி பயிலுபவர் களில் 100க்கு 50 பெண்கள். ஏற்கனவே 40,000 பெண் டாக்டர்கள் வேலை பார்த்துவருகிறார்கள். யுத்தப் படைகளிலும் எல்லா உத்தியோகங்களிலும் பெண்களைக் காணலாம். இது சென்ற 20 வருடங்க ளுக்குள் நடந்தேறிய விந்தையான சம்பவங்களில் முக்கியமானது. ருஷிய ஜாதியினரை ஜயித்து அடக்கி விடுவது ஒருநாளும் முடியாத வேலை என்று, கொடு மையே உருவெடுத்த ஜெர்மன் தலைவர்களுக்கும் இப் பொழுது நன்கு புலப்பட்டிருக்கவேண்டும். இத்து டன் தாங்கள் விந்தையாய்க் கட்டிவைத்தது, சேர்த்து வைத்தது என்றதை யெல்லாம் சுதந்திரப் போரில் எதிரியை அழிப்பதற்காக தாங்களே உடைத்து அழிக் கும் வீரம், அச்சாதியாரிடத்திலிருப்பதையும் காண்கி

ளும். பெண்களுக்குப் பூரண உரிமைகளை யளித்துப் பெண் சக்தியினுல் புஷ்டியும் வீரமும் பெற்ற ஜாதியினர் இக்காலத்து ருஷியர்கள். இதை நாம் நன்கு கவனிக்கவேண்டும்.

சரி, பெண்கள் நவீனநாகரிகத் தொழில்களில் ஆண்களுடன் சமபாகம் பெற்றுவிட்டால், நான் தொடக்கத்தில் கூறிய பெண்களின் தெய்விக மாண்பிற்குக் கேடு பிறக்காதா? சாதாரணமாகப் படித்து, அழகும், லாகவமும் பெறுவதே பெண்தெய்வத்திற்கு முக்கியமானதென்பது பொருத்தமில்லை என்று டீ. எச். லாரென்ஸ் சொல்வதும், வாழ்க்கையில் பெண் பலம் என்பது மந்திரபலம், பூஜாபலம் போன்றது என்று கூறுவதும், பெண்கள் ஏராளமாய் இச்சாமானியத் தொழில்களில் முனைந்து பாடுபடுவதும் எப்படி ஒற்றுமைப் படும்? இந்தப் பிரச்னைதான் இப்புதிய யுகத்தில் பெண்களைப் பற்றிய முக்கிய பிரச்னையாகும். பெண்கள் கல்வியானது, பெண் தெய்வத்தின் வலிமையைக் காப்பாற்றி, அத்துடன் விஞ்ஞானக் கருவிகளைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெண்களுக்கு அமோகமாகக் கொடுக்கவேண்டும். ஜனரக்ஷணம், அரசாங்கப் பாதுகாப்பு, சமூகோத்தாரணம் என்ற கடமைகள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரிநிகர் சமானமான அளவில் உண்டு என்ற மாபெருங் கொள்கையை பெண் கல்வியானது நிலைநாட்டவேண்டும்.

இதற்கு, ஆண்களுக்குக் கிடைக்கும் வித்தைகளெல்லாம், விரும்பிய பெண்மக்களுக்கும் பொருமை

யற்று அளிப்பதற்கு ஆண்மக்கள் முன்வரவேண்டும். சில வருஷங்களுக்கு முன் சென்னைப் பெண்கலாசாலை ஒன்றிலிருக்கும் ஆசிரியை ஒருவர் என்னிடம் "ஆண்கள் கற்கும் கல்வி பெண்களுக்கு அதிக சாதகமாக இல்லாமலிருக்கலாம். ஆனால், அதை இப்பொழுது செய்யும் வண்ணம் நம் கல்லூரிகளில் பெண்களுக்குப் போதிக்காவிட்டால், அவர்களுக்கு ஓர்வித அசூயையும் ஏமாற்றமும் ஏற்படும். அதில் பிரமைவைத்து வருந்துவார்கள். அவர்களே பிறகு தங்களுக்கு வேண்டிய கல்விமுறையைக் கண்டுபிடிப்பது நலம்", என்று கூறினார். இதை நான் முற்றிலும் ஒப்புக்கொள்கிறேன். இன்னும் ஒருபடி மேல்கூடச் செல்லுவேன். ஒரே கல்வியை இருபாலார்க்கும் குறைந்தது பன்னிரண்டு வருடங்களுக்குக் கற்றுக்கொடுப்பது நலம்;— சமையல், சங்கீதம் உள்பட என்று கூறுவேன். ஆண்களுக்கு, பெண்களுக்குரியவை என்ற கலைகள் தெரிவது கேடல்ல. இங்கிலாந்தில் நன்ருய்ப் படித்த ஆண்பிள்ளைகள் பெண்கள் உடைகளை 'டிஸைன்' செய்வது என்ற தொழில் நடத்துகிருர்கள்; பெண்கள் இஞ்சினியர்த் தொழில் பார்ப்பது போல. ஒன்றிலும் குற்றமில்லை.

கல்வி கேள்விகள், மதம், சாஸ்திரப் பயிற்சி, மனிதரின் குணநலம் யாவும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாகவும், ஒன்றுபட்டு மிருப்பது இனிமேல் விந்தையாகாது. சாதாரணத் தொழில்களிலேயே சமத்துவமும், ஐக்கியமும் ஏற்பட்டபிறகு, உள்ளக்கிளர்ச்சி அனுபவங்களிலும், கண் இன்பம்,

மன இன்பம், முதலியவைகளிலும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒற்றுமை உண்டாவது நிச்சயம் என்றே சொல்வேன். இப்பரிணுமத்தை வயது முதிர்ந்த ஆண்களும் பெண்களுமாகிய நாம் ஒருபொழுதும் தடுக்கலாகாது. இந்தியாவின் கலாசாலைகள் வாழ்க்கைத் தத்துவத்தை ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாகவே புகட்டி, இருபாலாரும் சமபலம், சம புத்தி, சம வீரம், சமமான ஸ்வாதந்தர்யம் ஆகியவைகளைக் கைப்பற்றியவர்களாக ஆக்கவேண்டும்.

நான் கூறுவதை பொறுப்பற்றவனே, புரட்சிக்காரனே சொல்வது என்று நினைக்கலாகாது. பொறுக்கி எடுத்த இந்தியர் அடிக்கடி இப்படியே வாதாடியிருக்கிறுர்கள். 1939 வருடம் பம்பாய் மாகாணத்துப்பெண் சர்வகலாசாலை ஒன்றில் நடந்த வருடாந்திரக்கூட்டத்தில் அச்சர்வகலாசாலைப்பிரதம அதிகாரி "இனிச்சகத்தினை வென்றிடுவோம்" என்ற தீரத்தை இந்நாட்டுப் பெண்மணிகளுக்குப் புகட்டுவது வேண்டும். அது உயர்தரக் கல்வியாலேயே தான் ஆகும்" என்று கூறினர். நம் ஜாதியாரின் உயிர்த் தியை எழுப்புவதற்கு உயர் தரக்கல்வி வேண்டும். அக்கல்வி ஆணுக்கும் பெண்ணுக்கும் சம அளவில் வேண்டும் என்ற கொள்கை குன்ரு திருத்தலைக் காண்கிறேம். அதே சந்தர்ப்பத்தில் அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த பீ. ஜீ. கேர் என்ற தலைவர் பெண்கள் ஆசைப்படும் உத்தியோகங்களை எடுத்துச் சொல்லுகையில், குறுக்கெழுத்தாளர்களாகவும், மோட்டார் வண்டி ஓட்டுபவர்களாகவும், போலிஸ்காரர்களாகவும்உத்தியோகம் பெறுவதற்குப்

பெண்கள் ஆசைப்படுவதில் குற்றம் ஒன்றுமில்லை என்றார். ஆனால் கலியாணம் பண்ணிக்கொண்டு நல்ல புதல்வரைப் பெறுதலும், தங்கள் வீட்டு வேலைப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதும் அவர்கள் வழ்க்கையில் முக்கிய அம்சங்கள் என்றும் கூறினர். இந்த அரசியல் நிபுணர் பெண்கள் ஆசைக் கடலை ஒரு சிறு குட்டையாகச் செய்ய முயலுகிறாரல்லவா?

இது சிக்கலான விஷயம் தான். குடும்பங்கள் ஒரு சிறிது மாறுபட்டு அமைக்கப்படலாம். சாப்பாடு, குடியிருப்பு, முதலியவை எளிதாயும், பொதுமையாயுமுள்ள வசதிகளைப் பயன் படுத்துவதாலும் அவை நமக்குக்கிட்டும் போது சில்லறைத் துன்பங்கள் நீங்கும். ஏன், நம் உணவு வெகு நேர்த்தியாயும், நுண்மையான உருவிலும், வெகு சுலபமாய் நினைத்த போது நமக்கு முன் வந்து விழும்படி செய்யும் இயந்திர வசதிகள் ஏற்படும் என்று தோன்றுகிறது. விவாகமான புருஷனும், பெண்ணும் தங்கள் தனித் தனி வேலைகளைச் செய்து கொண்டே, சமூகஸ்தாபனங்களின் உதவியைக் கொண்டு குழந்தைகளை நன்கு வளர்த்தல் சாத்தியமாகும். இப்பொழுது ருஷியாவில் ஆணுக்கும் பெண்ணுக்கும் விவாகம் நடக்கும் வயது மற்ற நாடுகளை விட மிகக்குறைந்திருக்கிறது என்று தெரிகிறது. ஆனல் பாதிரிப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பெண்கள் கலியாணம் வேண்டாம் என்கிறார்கள். அதற்கு மாற்று மேற் கூறிய புது மாதிரியான கலாசாலைதான்.

பொதுவாக, பெண்கள் விவாக விஷயத்தில் அதிக எதிர்ப்புக் காட்டாமலிருத்தலே தகுதி என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் "மங்கல மென்ப மனை மாட்சி, மற்றதன் நன்கலன் நன்மக்கட் பேறு" என்ற திருவள்ளுவர் வாக்கை எந்த ஹிந்துப் பெண்ணும் பொய்யாக்க வேண்டாம், நான் சொல்ல வந்த தொழில் சமத்துவத்திற்கும். தொழில் சுதந்திரத்திற்கும் ஹிந்து தர்மத்திற்கும் முரண் பாடு ஒன்றுமில்லை.

சென்ற 150 ஆண்டுகளாகக் கல்வித்துறையின் போக்கு:

சற்றேறக்குறைய 150 வருடங்களாக இந்தியாவில் ஆங்கிலமொழி மூலமாகக் கல்விபுகட்டி வரப்பட்டிருக்கிறது. பெண்டிங்கு, மெக்காலே போன்ற அரசாட்சியாளரின் நோக்கத்தின்படி இந்தியாவின் மூடமையைப் போக்குவதற்கும் இந்தியர் பிறகு வெகு வருடங்களாக மேற்கத்திய சாஸ்திரங்களைக் கைக்கொண்டு நாகரிக மக்களாகத் தோன்றவேண்டுமென்றும், தங்கள் நாட்டை ஒருநாள் தாங்களே ஆளுவற்குச் சக்திபெற வேண்டுமென்றும் நினைத்து ஆங்கில இலக்கியத்தையும், மேற்கத்திய சாஸ்திரங்களையும், கிறிஸ்தவ மதத்தையும் போதிப்பதற்காக கல்விச்சாலைகளை அரசாங்கத்தினர் ஸ்தாபித்தார்கள். பாதிரிஸ்தாபனங்களும் இவ்வேலையில் ஊக்கத்துடன் ஈடுபட்டன. அவர்கள் உத்தேசம் இந்தியா முழுவதும் கிறிஸ்தவ தேசமாக ஆக்கக்கூடும் என்பது. அப்படியே ஆரம்பத்தில் அநேகர் கிறிஸ்தவர்களாக ஆனார்கள். படிப்படியாக சர்க்காரும் ஆங்கில பாஷாஞானத்தை இந்தியர் பெரும்பாலார்க்குப் போதித்தல், உத்தியோக நிர்வாகங்களில் இந்தியரை சிறு துணையாக உபயோகப் படுத்துவதற்கு இன்றியமையாதது என்று கண்டு கொண்டார்கள். ஏதோ ஆங்கில இலக்கியங்களையும் அரசியல் நூல்கள் சமூக ஆராய்ச்சி நூல்கள் முதலிய

வைகளையும் கற்றுக்கொடுத்தார்கள். இந்தியர்கள் ஆங்கிலேயரின் ஞான உணவின் சில பருக்கைகளை உண்டுகளித்துத் தங்களுடைய நாகரிகத்தில் மோகங் கொண்டு தங்களுக்கு எக்காலமும் கீழ்ப்படிந்திருப் பார்கள் என்றும் ஆங்கிலேயர்கள் எண்ணியதுண்டு. ஆனால் இது நிறைவேறவில்லை. ஆங்கில அறிவாளி களின் சுதந்திர உணர்ச்சியைப் பருகிவந்த இந்தியர் தங்கள் நாட்டின் சுதந்திரத்தைக் கைப்பற்றச் சிறிது சிறிதாய் முயன்றுவருகின்றனர். இவர்கள் இயக்கம் உலக சம்பவங்களால் நாளுக்குநாள் வலுவடையவே ஆங்கிலேயருக்குப் பொதுவாகவே தாங்கள் ஒரு பெருந் தவறு இயற்றிவிட்டதாகத் தோன்றிற்று. இந்திய மக்களுக்கு இனிமேலாவது மேற்கத்திய கல்வியை இவ்வளவு தாராளமாய் வழங்குவதுகூடாது என்றே தீர்மானித்தார்கள். அதற்காக உயர்தரப் படிப்பு ஸ்தாபனங்களை கிட்டத்தட்ட ஐரோப்பிய ஸ்தாபனங்களைப் போலவே ஆக்குவதற்கு முயலுவ தாகக் காட்டி, மேற்கத்தியக் கல்வி நன்ருய்ப் பரவு வதை அணை போட்டுத் தடுப்பதற்கே முயன்றுர்கள். சென்ற 30 வருடங்களாக இந்தியச் சர்வகலாசாலை களைப் புதுப்பிக்க முயன்றுவந்தது இந்நோக்கத்துட னேயே செய்யப்பட்டது என்று கூறலாம். ஆனால் புதிய சிறிய, அடக்கமான சர்வகலாசாலைகளில் கல்வி பயின்றவர்களும் தங்கள் நாட்டின் நிலைமையைப் பார்த்து மனம் பொங்கி ஜனநாயக இயக்கங்களை உண்டாக்குவதற்கே முன்வந்தார்கள். இதைக்கண்டு ஹைஸ்கூல் கல்வியைக் குறுக்குவதே நலம் என்று நடுத்தரப் படிப்பையும், மாற்றத் தலைப்பட்டிருக்கிறுர்

கள். இன்று இந்தியாவில் அவ்வளவு பேர்கள் சர்வ கலாசாலைக் கல்வியைத் தேடுவது வீண் முயற்சி, அது தேச நன்மைக்கு விரோதமானது, அக்கல்வி ஸ்தாபனங்களின் உண்மையான வளர்ச்சிக்கே கேடு அதனிலிருக்கிறது. இந்தியக் கலாசாலைகள், கோணலான அரைகுறையான படிப்பை அளிப்பது நின்றுவிட வேண்டும். "கீழ் அஸ்திவாரத்தை நன்ருய்போட்டு ஒரு சிறு பகுதியார் உயர்தரக் கல்விக்குத் தகுதியுள்ளவர்களாக முயலுவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்", என்று சென்ற பத்து வருடங்களாக இந்திய அரசாங்கம் முயன்று வருகிறது. ஏதோ ஆரம்பக் கல்வி ஸ்தாபனங்கள் வளர்ச்சி பெறுவதை முக்கிய நோக்கமாக வைத்திருக்கிருேம் என்று சொல்கிருர்கள். அத்துறையிலும் கல்வி பரவுதல் பிரதானம் இல்லை; அக்கல்வி முற்றிலும் செம்மையாயிருக்க வேண்டும்; சற்றுக் குறைவான தொகையினர் படிப்பாளிகளாயிருந்தாலும் சாதகம்தான். எல்லாரும் படிப்பானேன்? இந்தியா ஒரு பெரிய கண்டம்; அப்பெரிய கண்டத்தின் கல்விமேன்மையைத் தேடுவதற்கு இந்திய மக்களாகிய எங்களுக்குச் சர்வ அதிகாரமும் உண்டு. நாங்கள் எவ்விதத்திலோ, உங்கள் தேசத்தில் எல்லாருக்கும் படிப்பு உண்டாவதுபோல், எங்கள் பெரிய கண்டத்திலேயும் அப்படியே செய்வோம். நீங்கள் உங்கள் அரசாங்க பலத்திருல் போடும் தடைகளைத் தகர்த்து எங்கள் தேசநோக்கத்திற்குரிய வெவ்வேறு திட்டங்களையும் ஸ்தாபனங்களையும் உண்டாக்கிக் கொள்வோம் என்று இந்திய மக்கள் கூறவேண்டும். நம் மாகாணத்தில் காங்கிரஸ் அரசாங்கம் நடந்த

போது அப்படிச்செய்ய முன்வரவில்லை என்று தேசாபி மானிகள் பரிதவித்தார்கள். இது, அரசாங்கம் தங்க ளுடைய பூர்ணமான பொருளாதார ஏற்பாடுகளைக் கொண்டு நிறைவேற்றவேண்டிய கடமையாகும். தேச மக்களுக்கு அரசாங்கத்திலிருந்து வரவேண்டிய கடன் இது.

காந்திஜி வர்தா கல்வி திட்டம் போட்டதும் இந்த அடிப்படையான நோக்கத்துடனேயே, படிப்பு தொழிலுடன் இணைக்கப்படவேண்டும். தொழில் என்றால் மனிதன் உழைத்துப் பிழைக்கும் தொழில். விளையாட்டு அல்ல. தொழிலாவது பிரதானமான ஜீவியத் தொழிலாயிருக்கவேண்டும். அதிலிருந்து பணம் வராமல் போனாலும் உணவு, வஸ்திரம் முதலி யன விளைந்தால்போதும், ஒருவன் படிப்பிற்கு அஸ்தி வாரத்தை நிறுவுதலும், அவன் ஜீவனோபாயத்தை ஒரு சிறு அம்சத்திலாவது அவன் கையிலடங்கிய தாகச் செய்வதும் வர்தா திட்டத்தின் நோக்கங்கள். அது எல்லா மக்களும் கீழ்ப்படியவேண்டிய சாஸனம் என்ற முறையில் ஆக்கவேண்டும். இது இந்தியாவி லுள்ள பெரும்பாலருக்கும் நன்மை விளைவிக்கக்கூடி யது. ஒருவருக்கும், செல்வந்தருக்கும், இக் கல்வி முறையினால் கேடு ஒன்றும் விளையாது. இந்திய சமுக ஒற்றுமைக்கு இது பயன்படும் என்றே கூறலாம்.

மற்றக் கல்வி ஸ்தாபனங்கள் அப்போதைக்கப் போது பழுதுபார்த்தலினாலேயே முன்னுக்கு வரும். இப்பொழுது நடக்கும் ஹைஸ்கூல், காலேஜ் படிப்புக்களை விசேஷமாய்ச் சீர்திருத்த வேண்டிய

தில்லை. ஆனல் கல்விக்கருவி தேச பாஷையாயிருக்க வேண்டும். சர்வகலாசாலைப் படிப்பும் தேசபாஷைகளில் வழங்கப்படவேண்டும். வேறு புகலில்லை. இப்பொழுது நாம் நடத்தும் முறை முற்றிலும் தவருன பாதையில் செல்கிறது. எனவே நம் அரசாங்கம் இன்றுள்ள கல்விமுறையை நாட்டிற்கும், நாட்டுமக்கள் வாழ்விற்கும் நலன் தரும் முறையில் திருத்தி அமைப்பது அவசியமும், அவசரமும் ஆகும்.

காலஞ்சென்ற டாக்டர் சுவாமிநாதய்யர்

டாக்டர் உ. வே. சுவாமிநாதய்யர் என்று அவர் வாழ்நாளின் இறுதியில் பத்து வருடங்களாக எல்லாராலும் அழைக்கப்பட்டு வந்த கல்விப்பெரும் வேந்தர், சுமார் அறுபது வருடங்களாக பண்டிதர் சுவாமிநாதய்யர் என்று இத்தேசம் முழுதும் கீர்த்திபெற்று வாழ்ந்து வந்தார். நம்நாட்டில் உண்மைப் பண்டிதன் ஒருவனுக்கு எப்பொழுதும் ஜனங்களின் மதிப்பு இருந்து வந்திருக்கிறது. அவ் விஷயத்தில் இது புண்ணிய பூமிதான். இருந்தாலும் நூற்றுக்குத் தொண்ணூறு பேர்கள் தங்களுடைய கல்வியை ஓர் இருடி தன் தவத்தைக் காப்பதுபோல் காக்கவேண்டும் என்று கருதவில்லை. மேன்மேலும் புதியவையான செய்திகளைத் தேடி அறியவேண்டும் என்ற அவா அனேகருக்கு இருப்பதில்லை. நம்ம வருக்கு எளிதில் கல்விக் கடலில் குளிப்பதற்கு ஆற்றல் உண்டாகிறது. ஆனால் திரைகடலோடியும் கல்வித் திரவியம் தேடுவது அவ்வளவு சகஜமாயில்லை. இது நான் அனேகரிடத்தில் பார்த்தது. சுவாமிநு தய்யர் ஒருவரிடம்தான் தெவிட்டாத கல்விப் பசியை நான் கண்டதுண்டு. பிராசீனக் கல்வியாளர்களானு லும் சரி, நம்மைப்போல், நவீனப்படிப்பாளிகளானு லும் சரி, கல்வித் தான்யத்தைச் சேகரித்துத்தானே அதைச் சமைத்து அரும் உணவுகளாய்ப் படைத்துப்

பல்லாயிரம் பேர்களுக்கும் அளித்து அக்ஷய பாத்திரம் போல் எப்பொழுதும் நிறைந்தே காண, தானும் உம்பர் உகக்கும் உணவாக அதை ஆக்கி அருந்தித் தேவர்களின் புஷ்டியையும் மன மலர்ச்சியையும் பெற்றவர்களில் பிரதம ஸ்தானம் சுவாமிநாதய்யருக்கே உரியதாயிருந்தது. அவர் சந்ததியாகிய நாம் இதை எக்காலமும் நினைத்துப் பார்க்கவேண்டும்: "கல்வியினால் சாவின்மையை அருந்துகிறான்" என்ற வாக்கியம் அவருக்கே உரியது. பிறகு, கல்விக்கு அணிகலன் அடக்கம் என்ற கருத்தும் அவரிடத்தில் பூர்ணாவதாரம் எடுத்திருந்தது. ஒருபுறம் பக்குவமான தெய்வபக்தி; மற்றொருபுறம் ஹிருதயபூர்வமான மனித நட்பு; இவ்விரண்டும் அவரிடம் குடிகொண்டிருந்தன. அவரிடம் மேதைக்கு அறிகுறியான கர்வம் இல்லாமலில்லை, ஆனால் அதை அவர் எப்படி அடக்கியாண்டிருந்தா ரென்பது விந்தையிலும் விந்தையாகும். லௌகிகத்தில் முழுகி எழுந்தவர் அவர் என்பது உண்மையே. ஆனால் உலக சன்மானத்திற்காக அவர் வணக்கத்தைப்பேணினார் என்று சொல்ல முடியாது. நம் நாட்டுப் பெரியார்களுக்கு விசுவாமித்திரருடைய குணமும் வசிஷ்டருடைய குணமும் லக்ஷிய குணங்களாகக்கருதப்படுவதுண்டு. நம் சுவாமிநாதய்யரிடம் வசிஷ்டருடைய குணம் நிரம்பியிருந்தது. கௌசிகரின் நூல் தோய்ந்த சிந்தையும் அவருக்குண்டு. வசிஷ்டருடைய அருட்பெருமையை சுவாமிநாத அய்யருக்கும் கடவுள் அருளியிருந்தார். அவ்வசிஷ்டரைப் போலவே இங்கிதம் அறிந்து புத்தி கூறுவதில் நம் புலவர் அவர்கட்கு நிகரில்லை என்று

நான் கேட்டதுண்டு. நல்லதைச் செய்பவன் துர்கதியை அடையமாட்டான். ஒரு சிறிது நலம் செய்தவரிடம் அவர் காட்டும் நன்றியானது யாரையும் பிரமிக்கச் செய்யும். நன்றியில்லா உலகில் நன்றிக் குடமாயிருந்தவர் அவர். எவ்வளவு பெரியார் அவர்; ஒரு சிறியசகாயத்திற்காக அவர் நம்மைப்பாராட்டுவது, களங்கமற்ற சோபையுள்ளதாயிருக்கும். அவருடைய வாழ்த்துக்களால், மடாதிபதிகள் முதலியவருக்குத் தகாத புகழ் உண்டாயிற்று என்பார்கள். அது சரியல்ல. அவர் மற்றவரைப் புகழ்ந்தது, செய்நன்றி மறவாமை என்ற அழகிய குணம் என்றே சொல்லவேண்டும். அவர் வாழ்த்துதலும் வெகுநாகரிகமாயும் இனிமையாயுமிருக்கும்.

தமிழ் இலக்கியத்திற்கு அவருடைய தனி முயற்சியாலே பண்பும் தொகையும், எல்லேயும், அர்த்தமும் மலேபோல் வளர்ந்திருக்கின்றன. பிராசீன முறைகளில் கல்வி கற்றவராயிருந்தும் நவீன முறைகளில் ஆராயச்சிக் கலேயைத் தமிழ் உலகில் வளர்த்த பெருமான் அவர். இதை நினேக்க நினேக்க ஆங்கிலப் பள்ளிக்கூடக் கல்வி கற்றும் புகட்டியும் வரும் நாம் தலேகுனியவேண்டும். நம் நாட்டில், மேனுட்டுப் புலவர்களின் முயற்சிகளுக்கு ஒப்பான முயற்சிகளேக் கையாண்டவர் இந்தப் பச்சைத் தமிழ்ப் புலவர் அன்றி வேறு சர்வகலாசாலேக் கலேவாணர்கள் யாரிருக்கிறுர்கள்? இதிலிருந்து என்ன உறுதியாகிறது: சுவாமிநாதய்யர் கற்ற கல்வியானது உயிரையளிக்கும் கல்வி, நாம் கற்ற கல்வி அவ்வாறல்ல என்பது. ஆனல்

அதற்கு முக்கிய காரணம் அவரிடம் குடிகொண்ட மனத் திட்பம், சாந்தம், உழைப்பு துணிவுடைமை, என்பவையாகும். தமிழரின் மாபெரும் நூல்களையும் நெஞ்சையள்ளும் மணியாரங்களாகிற காப்பியங்களை யும் கண்டு பிடித்துக்கொடுத்த தமிழ்க் கல்விக் கடலின் நிகரற்ற மாலுமி சுவாமிநாதய்யரேயாவர். ' முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே'' என்பது தமிழ்க் கடலுக்கும் பொருந்தியதாகும். நம்மவர் எல்லோ ரிலும் அவரே தமிழ்த் தாயினிடத்தில் அத்யந்த பக்தி செய்தார். "திறமான புலமையெனில் வெளி நாட்டோர் அதை வணங்கச் செய்தல் வேண்டும்''. அத்தகைய புலமைப் பெருமை வாய்ந்தவரில் முதிர்ந் தவர், முதல்வர், நம் சுவாமிநாதய்யரே. தமிழ்நாட் டுப் புலவருக்கு வருங்காலத்தில் குருவாகவும் மார்க்க தரிசியாகவும் இருப்பவர் இவரே.

ரவீந்திரநாதரின் வாழ்க்கைத் தத்துவம்

I

இந்திய மக்களுக்குள் முதன்மை பெற்று, இந்தியத் தாயின் வீழ்ச்சியை எண்ணி பரிதவித்து, மனமுருகித் தீராத உள்ளத் தாபத்தைச் சுடர்விட்டெரியும் சிந்தனைகளாக மாற்றி, பயத்தையும் பொய்மையையும் வெல்லும் வெற்றிக் கனல்களாக அச்சிந்தனைகளை இந்திய உலகினுக்கே ஈந்து, இந்தியருள்ளம் உயர்வு பெறும் வண்ணம், மனப்போர், ஆத்மத்தியாகம், கர்மயோகம், என்ற முத்தவம் பூண்ட வள்ளல் ரவீந்திரரை நாம் இப்பொழுது இழந்துவிட்டோம்.

> "அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள் சேர்ந்த
> இன்னா உலகம் புகல்."

அவரே கீதாஞ்சலியில் பாடியிருக்கிறார்: "காற்றினிலும் மழையிலும் அடிபட்ட இந்த ஓடத்தை ஒன்றின்பின் ஒன்றாகத் துறைமுகங்கள் நோக்கிச் செலுத்துவது, இனி எனக்கில்லை. கடலின் அலைகளால் தூக்கிஎறியப்படுகின்ற விளையாட்டு இனியும் இல்லை. அந்நாட்கள் கழிந்து வெகுகாலமாய்விட்டது. இப்பொழுது அமரத்வ நிலையின்கண் மரித்தெழுதலே எனது ஆசை. ஓசையில்லாக் கம்பிகளின் கீதம், பொங்கி எழும் அகாத பாதாளத்தின் அருகே உறை

யும் ஈஸ்வரன் கொலுமண்டபத்தில், என் ஜீவிதையா கிற யாழை எடுத்துச் செல்வேன். அங்கே நித்திய காலத்தின் ஸ்வரங்களுக்கு என் யாழை இசைப்பேன். அது தன் கீதத்தை முற்றிலும் துறந்தவுடன், அதை நிச்சப்தமாய், சப்தாதீதமான பரம்பொருளின் பாதத் தில் வைப்பேன்." இது சுத்த சாத்விகமான கற்பனை. ஒரு சிறிது ராஜஸமான கற்பனையையும் கீதாஞ்சலியில் ரவிந்திரர் செய்திருக்கிறார். ஈஸ்வரனைப் பார்த்துச் சொல்கிறார். "என்வெற்றிச்சின்னங்களல்ல, என் தோல்விச் சின்னங்களாலேயே உன்னை நான் அலங் கரிப்பேன். வெற்றி மாலைகள் இல்லை, என் தோல்வி மாலைகளையே உனக்குச் சூட்டுவேன். பராசயமடை யாமல் ஒளிவது என் சக்தியிலில்லை. என் கர்வம் தலை சாயும், என் ஆயுளின் கட்டு மிதமிஞ்சிய வேதனை களால் உடைந்து சிதறிவிடும். சூன்யமாகிவிட்ட என் இதயம், நாணலுக்கு இணையாக விம்மி விம்மிச் சோககீதம் பாடும். கல்லும் கண்ணீர் உகுத்து உருகி விடும்........எனக்கு ஒன்றும் மிஞ்சாது. உன் பாதத் தின் கண், யான் மட்டில்லா மரண வேகத்தைப் பெறுவது திண்ணம்." இதுவும் ரவீந்திரர் ஜீவிதா னுபவத்திற்குப் பொருந்தும். முதலில் கூறிய ஆனந்த நிலையும் உலக யாத்திரைக்குப் பிறகு அவருக்குக் கிட்டியதாகும். ரவிந்திரர் நிகரற்ற வீரர்; மகிமை வாய்ந்த துறவி; "நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும்" பெற்ற வித்தகர்களில் ஒருவர். நவீன இந்தியாவை உருவாக்கியோர்களில் சிறந்தவர்; நிகரற்ற குரு; எல்லையற்ற இரக்கமுள்ளவர். இப் பெரியார் மறைந்து சில நாட்களாயின.

"சிநேகிதரே, நாம் மரித்துவிடுகிறோம். நாம் மட்டுமல்ல. ஒவ்வொரு மனிதனும் தனக்கு உகந்த பிரதேசத்தில், தனக்குப் பங்கு கிடைத்த பூமியின் பகுதியில் எந்த வஸ்துவை நேசித்துப் போற்றி வந்தானே, அதுவும் அவனுடன் சாகிறது, அல்லது மாறிவிடுகின்றது. வெகு சீக்ரெத்தில் நல்லாருக்குக் கூட ஒரு ஞாபகச்சின்னம் மிஞ்சி நிற்பதில்லை" என்று மகாகவி வேர்ட்ஸ்வர்த்து கூறியிருக்கிறார்.

அதெப்படியானாலும் இவர் ஞாபகம் அனந்த மானது, நம்மிந்திய நாட்டில்; மேலும் உலகத்தைக் காக்கும் சேதனைப்பொருள் அதிலிருக்கிறது, இந்தியா வின் பூர்வீக சொத்தைச் சேர்ந்தது. நாம் இதை நன்குணர்ந்து எக்காலமும் அவர் காட்டிய வழியில் நம்பிக்கையும் அதற்கேற்ற வினைத்திட்பமும் பெறு வோமாக.

ரவீந்திரர் ஜீவிதையின் தத்துவம் யாது? அவர் சுதந்திரதேவியின் செல்வக் கவி—உபாசகர். அவரும் சுதந்திர தேவியைக் குறித்து வங்க மொழியில் ஏராள மான பாடல்கள் பாடியிருக்கிறார்; நம் நாட்டின் திலகமான பாரதியார் கூறுவதுபோல:

"தேவி நின் ஒளி பெறாத
தேயமோர் தேயமாமோ?
ஆவியங்குண்டோ செம்மை
அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்களுண்டோ?
பாபியரன்றோ நின்றன்
பாலனம் படைத்திலாதார்?"

வேதாந்தத்தில் மட்டிலல்ல, கல்வித் துறையிலும், சமுக வாழ்க்கையிலும், அரசியல் தருமங்களிலும், "ஸ்வாதந்தர்ய மென்றதன் மேற் கொடியைத் தூக்கினுர்" என்று அவரையே சொல்லலாம். இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திலீடுபட்ட மாபெரும் வீரர்களாகிய, திலகர், அரவிந்தர், காந்தி, ஜவாகர் முதலியோருக்கெல்லாம் தக்க சமயங்களில் அருந்துணை நின்றவர் அவரே. தானும் காயம்பட்டவர் தான். இம்மகா வீரருடைய வாழ்க்கையையும், இனிப்பும் வன்மையும் ஒருங்கே வாய்ந்த அவர் சொற்களையும் எக்காலத்திலும் சிந்தனைசெய்து அவர் நாமத்தை வந்தனை கூறி மனதிலிறுத்தி நாம் வாயாற வாழ்த்துவோமாக.

* * * *

II

நமது இதய வறுமையைப்போக்கி, மன உறுதி பெற்று, பயமின்றி, உண்மையறிந்து விடுதலை பெறுவதே, கல்வியின் உயர்ந்த நோக்கம் என்பதை தாகூர் நன்கு உணர்ந்தவர்; அகாரணமான கட்டுப்பாட்டைத் தகர்த்தெறியவேண்டும், எல்லா வகைகளிலும், எல்லாத் துறைகளிலும் விடுதலை பெறவேண்டுமென்பதே தாகூரின் குறிக்கோள்; கல்வித்துறையிலும் இயற்கைக்கு முரணுன பந்தங்களை விலக்கவேண்டுமென்ற மகோன்னத லட்சியத்தை, அவரது சாந்திநிகேதன் சர்வகலாசாலையில் நிறைவேற்றிப் பெரும் பலன்களை எல்லா இந்திய மாணவர்களும் அடையுமாறு செய்

திருக்கிருர். தாய்மொழியின் சிறப்பையும், வளர்ச்சி யையும், இயற்கை எழிலையும் நன்கு உணர்ந்து, அதனு லேயே தனது தாய்மொழியான வங்கமொழியில் சர்வ சாதாரண ஜனங்களும் பாடி அனுபவிக்கக்கூடிய முறையில், எளிய நடையில் 2000 பாடல்களுக்கு மேல் பாடிவைத்திருக்கிருர். ஒவ்வொரு பாடலிலும், கவிஞரின் இதயம் இசைச்சிறகுகொண்டு, பறந்து சுழன்று வருவதைக் காணலாம்.

அவருடைய சிந்தனைகள், சித்திரமொழியில் உதயமாகின்றன. அவருடைய சோகம், கவிதைக் கலையாகவே மாறிவிடுகிறது; கவிஞரின் கண்ணீர், வங்கமொழியின் இதயத்தைப் பேரின்பக் கடலாகவே மாற்றிவிடுகிறது. நாட்டுக்கல்வியைப்பற்றி தாகூர் பாடியிருப்பதை, நமது ஆவேசம்நிறைந்த அருட் கவி சுப்பிரமணிய பாரதியார் எவ்வளவு அழகுபட மொழி பெயர்த்திருக்கிருர்.

"இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்,
இறப்பை நீக்கி, அமிர்தத்தை ஊட்டுவாய்"
அருளும் இந்த மறையொலி வந்திங்கே
ஆழ்ந்த தூக்கத்தில் வீழ்ந்திருப்பிர் தமைத்
தெருள் உறுத்தவும் நீர் எழு கில்லீரோ?
தியநாச உறக்கத்தில் வீழ்ந்தநீர்
மருளை நீக்கி அறிதிர் அறிதிரோ
வான் ஒளிக்கு மகா அர்இ யாம் என்றே."

அதைவிட நயமாக, சுப்பிரமணிய பாரதியார், நமது தாய்மொழியான தமிழ்மொழியின் இனிமை

யைப்பற்றி எவ்வளவு ஆழமாக, இனிமையாக, அருமையாகப் பாடியிருக்கிருர், பார்ப்போம்; இது ஒரு தேன் அருவி!

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணேம்
பாமர ராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்ருே? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

* *

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்ருேம்; ஒரு சொற்கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச்செய்வீர்!

* *

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கச் செய்தல் வேண்டும்.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.''

* *

தாகூரைப்போலவே, வசனகாவிய நடையில் பாரதியாரும் சிறந்த உண்மைகளை சிற்பச் சிலையாக சிருஷ்டித்துக் காட்டும் ஆற்றலுடையவர்; தாகூரின் வங்க வசனத்திலும், ஆங்கில வசனத்திலும், பாரதியாரின் தமிழ் வசனத்திலும், கவிதை யொளியை, மின்னலை, சுடரை, மணியை நாம் கண்டு இன்புறுகிறோம். அவர்களுடைய சக்திவாய்ந்த வசனக் கடலிலே, "ஞாயிறு ஒரு நுரை; சக்திக் கடலிலே, ஒளி ஒரு தாளம்; சக்திப் பொய்கையிலே, ஞாயிறு ஒரு மலர்; சக்தி வீணையிலே, ஞாயிறு ஒரு வீடு''

எங்கள் அரிய இனிய இலக்கிய வெளியீடுகள்

1. கிளிக்காதல் — பண்டித ரத்நம் பாடியது 0—8—0
2. சிறை அனுபவம் — ஆஸ்கார் ஒயில்ட் 1—4—0
3. சிறந்த சிறு கதைகள் — ஆஸ்கார் ஒயில்ட் 1—4—0
4. ஓற்றையங்க நாடகங்கள் — கே. ஸ்ரீனிவாஸ், பி. ஏ. 0-12—0
5. தாகூரின் கவிதைக் கனி — மணிவாசகம் 0-12—0
6. கவிதை, கலை, விமர்ஸனம் - சுப. நாராயணன் 2—0—0
7. கல்வி — வே. சாரங்நாதன் எம். ஏ. 1—6—0
8. அசோகவனம் — ஆ. முத்துசிவன் B. A. (Hons) (அச்சில்)
9. 'சலோம்'—சிறந்த நாடகம் — ஆஸ்கார் ஒயில்ட் ,,

நாவலர் பவர் பிரஸ், காரைக்குடி.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
முன்னுரை	22	சிருஷ்யாக	சிருஷ்டியாக
4	25	நிறம்பிய	நிரம்பிய
24	14	நசிக்கி	நசுக்கி
30	26	உறக்க	உரக்க
48	20	சிலவு	செலவு
50	13	சிலவு	செலவு
59	12	பாய்கிறது	பாய்கின்றன
59	24	வர்ணிக்கப்பட்டிருக்கிறது	வர்ணிக்கப்பட்டிருக்கின்றன
82	12	யாமரிந்த	யாமறிந்த
83	18	வீனை	வீணை